
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 நவம்பர் 26 - டிசம்பர் 02 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 34




## சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் இருப்பது

# சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானது!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரை



**சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் தராமல் இருப்பது, சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.**

சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் 18.11.2023அன்று நடைபெற்றது. அதில் ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் தனித் தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்து உரையாற்றினார். அவை வருமாறு:

“மரம் ஒய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை” என்றார் புரட்சியாளர் மா சே துங். காய்ச்சல், தொண்டை வலி காரணமாக சில நாட்கள் வீட்டில் நான் ஓய்வெடுத்து வந்தாலும், எனது உடல் நலனைவிட இந்த மாநிலத்து மக்கள் நலன், தாய்த்தமிழ் நாட்டின் நலன், நூற்றாண்டு கண்ட இந்த மாண்புமிகு சட்டப்பேரவை நலன் தான் அதைவிட முக்கியம் என்ற மன உறுதியோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் நம்மை, இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்த சட்டமன்றத்தை தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால், இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன் தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

இங்கே படமாக மட்டுமல்ல; பாடமாக நின்று கொண்டு இருக்கிறார் வான்புகழ் வள்ளுவர் அவர்கள்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்**

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியவர் அவர்தான்.

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான் என்று இதற்கு உரை எழுதினார் எங்களையெல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்கள். ஆளாக்கிய தலைவரின் நெறி நின்றுதான் ஆட்சி நடத்தி வருகிறோம்.

அதற்கு தடைக்கற்கள் விழுமானால், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வழியில், ‘தடந்தோள்கள் உண்டு’ என்பதையும் மெய்ப்பித்துக் காட்டி வருகிறோம்.

### இந்திய ஒன்றியத்துக்கு முன்னோடி

இந்தியாவில் மக்களாட்சி மாண்பை உருவாக்கும் சட்டமன்றமாக முதன்முதலாக எழுந்த சட்டமன்றம் நமது தமிழ்நாட்டு சட்டமன்றம்.

இந்திய விடுதலைக்கு முன்பும், பின்புமாக ஒரு நூற்றாண்டு காலமாக பல கட்சிகள், பல முதலமைச்சர்கள், பல நூறு உறுப்பினர்களைக் கண்ட தமிழ்நாடு சட்டமன்றம், ஜனநாயக விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருவதுடன், சமூகநீதியின் அடிப்படையில் சமூகநலத் திட்டங்களை அனைத்துத் தரப்பு மக்களின் நலன் கருதிச் செயல்படுத்துவதில் இந்திய ஒன்றியத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது என்றால், அது மிகையல்ல!

இரட்டையாட்சி முறைப்படி தேர்தல்கள் நடந்து, 1920ஆம் ஆண்டு இங்கு அமைந்த சட்டமன்றம்தான், ஒரு சட்டமன்றம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற நெறிமுறை நடைமுறை மரபுகளை உருவாக்கியதாக அமைந்திருந்தது.

இது எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்வையிட இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இருந்தெல்லாம் இங்கு பார்வையாளர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

இத்தகைய சிறப்பினைப் பெற்ற, மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தான், நூறாண்டு காலமாக எத்தனையோ சமூக, அரசியல், பொருளாதார, சமதர்ம, சமூகநீதிச் சட்டங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

- நிதி நெருக்கடி
- ஒன்றிய அரசின் சில இடையூறுகள்

இவை மட்டும் இல்லாமல் இருந்தால் இன்னும் பல திட்டங்களை எங்களால் செய்து காட்ட முடியும் என்று இதே மாமன்றத்தில் ஓராண்டுக்கு முன்னதாக நான் குறிப்பிட்டதையும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். இடையூறுகள் என்று நான் சொன்னதன் விளைவாகத்தான் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியதாக உள்ளது.

### சிறப்புக்கூட்டம் ஏன்?

பொதுவாக தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் சிறப்புக் கூட்டங்கள், முக்கிய நிகழ்வுகளுக்காகவும், முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் கூட்டப்படுவது வழக்கம்.

அதேபோல் நாம் இன்றைக்கு கூட்டியிருக்கும் சிறப்புக் கூட்டம், அவசர, அவசியம் கருதி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியும் கூட்டப்பட்டுள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள்.

“I withhold assent” அதாவது, தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, நாம் இங்கு நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளை கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை நாம் இங்கே மீண்டும் நிறைவேற்றி, அவரது ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைக்க இருக்கிறோம். அதற்காகத்தான் இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை மிக்க ஒரு அரசால், மாநில நலன் கருதி சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநர் அவர்களின் கடமை. அவருக்கு அதில் சட்டரீதியாக அல்லது நிர்வாக ரீதியாக ஏதேனும் தெளிவுரை தேவைப்பட்டால், அதனை அவர் அரசிடம் கோரலாம். அதனை அரசு வழங்க வேண்டும். அந்த வகையில் இதற்கு முந்தைய சில நிகழ்வுகளில் அவர் எழுப்பிய சில வினாக்களுக்கு முறையாக எழுத்து மூலமாகவும், சம்மந்தப்பட்ட அரசு செயலர்கள், தலைமைச் செயலாளர் ஆகியோர் நேரிலும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்த ஒரு நிகழ்விலும் அவர் கோரிய விளக்கங்கள் அவருக்கு வழங்கப்படாமல் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சில சட்ட முன்வடிவுகளுக்கு அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பி வைத்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஆளுநர் அவர்கள் அவமதிக்கின்றார் என்றுதான் பொருளாகும்.

12 சட்ட முன்வடிவுகள் மற்றும் வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங்காமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும்! ஜன

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

### மீண்டும் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள்

1. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (2020)
2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்ட முன்வடிவு
3. தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு
4. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு
5. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு
6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு
7. தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு
8. தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு
9. தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (2022)
10. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்ட முன்வடிவு

கட்சிக் கடிதம்

## அலைகடல் மீது தொலையும் வாழ்க்கை 1

# கடல் நீரோட்டத்துக்கு எல்லைகள் தெரியாது!



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**உலகில் வாழும் எண்ணற்ற தொழிலாளர்களின் வாழ்வில் வேறுபட்ட, வித்தியாசமான, வேறு எந்த தொழிலாளிக்கும் இல்லாத அவலங்கள் நிறைந்திட்ட, வாழ்க்கையினை வாழ்ந்திட வேண்டிய கட்டாய நிலைக்கு தமிழ்நாட்டு மீனவ பெருமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.**

அவர்களின் துயரங்கள் என்றுதான் தீரும் என்ற பெரும் கேள்வி எழுந்துள்ளது.

ஒவ்வொரு தொழிலாளியும் தான் பணிபுரியும் இடத்தில், தான் மேற்கொள்ளும் பணிக்கு உத்தரவாதம் வேண்டும். ஊதிய உயர்வு வேண்டும், ஊக்கத்தொகை வேண்டும், பணி ஓய்வுக்குப் பின்னர் ஓய்வுக் கால ஊதியம் வேண்டும் என்று கோரிப் போராடுவார்கள்.

ஆனால், மீனவர்கள் அதிலும் குறிப்பாக, தமிழக மீனவர்கள் கோரிக்கை என்பது வித்தியாசமாக உள்ளது.

தனது உயிருக்குப் பாதுகாப்பு வேண்டும். தனது தொழிலுக்குப் பாதுகாப்பு வேண்டும். தனது உடமைகளுக்குப் பாதுகாப்பு வேண்டும் என ஒன்றிய, மாநில அரசுகளிடம் மன்றாடுகின்றனர்.

தமிழ்நாட்டு கடற்கரை ஏறத்தாழ 1076 கி.மீ. நீளம் கொண்டதாகும். இது நாட்டின் மொத்த கடற்கரையில் 13 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாட்டு கடற்கரை பழவேற்காடு பகுதியில் இருந்து வேதாரண்யம் வரை சோழமண்டல கடற்கரை என்றும், வேதாரண்யத்தில் இருந்து தனுஷ்கோடி வரை பாக் நீரிணைப்பு என்றும், தனுஷ்கோடியில் இருந்து கன்னியாகுமரி வரை மன்னார் வளைகுடா / முத்து குளித்தலை என்றும், கன்னியாகுமரியில் இருந்து நீரோடி வரை அரபிக் கடல் பகுதி என்றும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாக் நீரிணை மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதிகளில் பல மணல் திட்டுகளும் சிறிதும் பெரிதுமாக பல தீவுகளும் உள்ளன.

அவற்றில் இராமேஸ்வரம் தீவு, குந்துக்கல் தீவு, புனவாசல் தீவு, முயல் தீவு, பூ மரிச்சான் தீவு, முல்லைத்தீவு, மணல் தீவு, கச்சத்தீவு, அப்பா தீவு, நல்ல தண்ணி தீவு, உப்புத் தண்ணி தீவு மற்றும் குருசடித் தீவு ஆகியன குறிப்பிடத்தக்கவை.

இந்தத் தீவுகளில் ஒன்றான கச்சத்தீவு என்பது இந்திய, இலங்கை நாடுகளிடையே, பாக் நீரிணையில் சுமார் ஒரு மைல் கல் நீளமும் அரை மைல் கல் அகலமும் 285 ஏக்கர் பரப்பளவும் கொண்ட, மீன்வளம் மிக்க ஒரு சிறிய தீவு ஆகும்.

பாக் நீரிணை என்பது தமிழகத்தில் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் கடற்கரை பகுதிகளுக்கும் இலங்கையின் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் கடற்கரைக்கும் இடைப்பட்ட கடல் பகுதியாகும்.

பாக் நீரிணை மிகக் குறுகிய கடற்பரப்பை கொண்டது. இதன் அதிகபட்ச அகலம் 100 கிலோ மீட்டர் ஆகும்.

சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்த இராபர்ட் பாக் என்பவரின் பெயர் தான் இந்த நீரிணைக்கு சூட்டப்பட்டுள்ளதாக கூறுகிறார்கள். இந்த நீரிணைப்பில் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்வளம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இராமேஸ்வரத்திலிருந்து படகில் செல்லும் போது இராமேஸ்வரம் கோயில் கோபுரம் மெல்ல மறைய, கச்சத்தீவு நம் கண்களுக்குத் தெரியும்.

இராமேஸ்வரத்திலிருந்து கச்சத்தீவு செல்ல அதிகபட்சம் இரண்டு மணி நேரமாகும். கச்சத்தீவிருந்து யாழ்ப்பாணம் 70 கி.மீ. தொலைவும், நெடுந்தீவு 28 கி.மீ. தொலைவும், இராமேஸ்வரம் 18 கி.மீ. தொலைவும், தலைமன்னார் 25 கி.மீ. தொலைவும் உள்ளது.

கச்சத்தீவு பகுதியை சுற்றிலும் நல்ல மீன்வளம் குறிப்பாக இறால் அதிக அளவில் கிடைப்பது மட்டுமல்ல, சங்கு, முத்துச்சிப்பி மற்றும் பவளப்பாறை ஆகியன மீனவர்களுக்குப் பெரும் வருமானத்தை ஈட்டி தருவதாகும்.

தமிழ்நாட்டு மீனவர்கள் குறிப்பாக இராமேஸ்வரம், தங்கச்சி மடம், பாம்பன் மற்றும் மண்டபம் பகுதி மீனவர்கள் பாரம்பரியமாக கட்டுமரங்கள் மற்றும் நாட்டுப் படகுகளின் மூலம் மீன்பிடிக்கச் செல்வதும், கச்சத்தீவில் ஓய்வு எடுப்பதும், மீன் வலைகளை உலர்த்துவதும், மீண்டும் மீன்பிடிக்கச் செல்வதும் என்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இதேபோன்று இலங்கை பகுதியைச் சேர்ந்த நெடுந்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களும் கச்சத்தீவு பகுதிக்கு வந்து மீன்பிடிப்பதும், வலைகளை உலர்த்துவதும், ஓய்வு எடுத்துக் கொள்வதும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

இருநாட்டு மீனவர்களுக்கும் எத்தகைய பகை உணர்வோ, காழ்ப்புணர்ச்சியோ இல்லை. இரு நாட்டு மீனவர்களும் சகோதர பாசத்துடன் பழகி வந்தனர்.

இராமநாதபுரம் சேதுபதி கச்சத்தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமைகள் தொடர்பாக பல்வேறு ஒப்பந்தங்கள் செய்துள்ளார்.

1905 ஆம் ஆண்டு சீனி கருப்பன் என்ற மீனவர் புனித அந்தோனியார் தேவாலயத்தை கச்சத்தீவில் கட்டினார்.

ஆண்டுதோறும் மார்ச் மாதம் அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறும். தங்கச்சி மடத்திலிருந்து கத்தோலிக்க பாதிரியார் கச்சத்தீவுக்கு சென்று திருப்பலி நடத்துவார்.




இவை அனைத்தும் இராமநாதபுரம் மாவட்ட கெஜட்டில் உள்ளது.

1948 ஆம் ஆண்டு ஜமீன்தார் முறை ஒழிக்கப்பட்டது. சென்னை மாகாண அரசு 11.8.1949ல் அரசாணை எண்: 2093 வெளியிட்டு, கச்சத்தீவு சென்னை மாகாணத்திற்கு சொந்தமான அரசு நிலம் என அறிவித்தது.

அத்தகைய அரசாணை மூலம் இராமேஸ்வரம் கிராம சர்வே எண்: 1250ல் 285 ஏக்கர் 200 சென்ட் பரப்பளவு கொண்ட கச்சத்தீவை அரசு புறம்போக்கு நிலமாக அறிவித்தது. இந்நிலை 1974 ஆம் ஆண்டு வரை நீடித்து, இந்திய அரசின் கட்டுப்பாட்டில் கச்சத்தீவு இருந்து வந்தது.

1974 ஆம் ஆண்டு நல்லெண்ண அடிப்படையில் இந்திய, இலங்கை உறவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய பிரதமர் இந்திரா காந்தி, இலங்கை பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயகா ஒப்பந்தத்தின் மூலம் கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது. 1974 ஜூன் மாதம் 26 ஆம் நாள் இந்திரா காந்தியும் ஜூன் மாதம் 28ஆம் தேதி சிரிமாவோ பண்டாரநாயகாவும் கையெழுத்திட்டனர்.

இந்திய மீனவர்கள், சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் கச்சத்தீவுக்கு வந்து செல்லலாம். எந்தப் பயண ஆவணங்களும் இலங்கை அரசிடம் அனுமதியும் பெறத் தேவையில்லை என்றும், பாரம்பரிய வழக்கப்படியே இந்திய, இலங்கை படகுகள் பரஸ்பர நீர் எல்லைக்குள் வந்து செல்லலாம் என்றும் உடன்பாடு காணப்பட்டது. அதுவும் 1976ல் இல்லை என்று ஆனது.

பாரம்பரிய மீனவர்களைப் பொறுத்தவரை கடலில் மீன் பிடிக்க எல்லை என்பதே இல்லை. கடல் எல்லைகள் என்பவை நிலத்தில் வாழும் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. நிலம் சார்ந்த மனிதர்களால் உருவாக்கப்பட்ட எல்லைகளை பாரம்பரிய மீனவர்கள் பொருட்படுத்துவது இல்லை. ஏனெனில் காற்றும் கடல் நீரோட்டமும் இயற்கையில் எப்படி உள்ளதோ அதற்கேற்பவே கடல் வேட்டையை அமைத்து கடலில் வலையை வீசுவார்கள்.

இந்திய கடல் எல்லையில் வலைகளை வீசினால், சில மணி நேரங்களில் கடல் வெள்ளம் எனப்படும் கடல் நீரோட்டம் வலைகளையும், படகுகளையும் இலங்கை கடற்பகுதிக்குள் இயற்கையாகவே கொண்டு சென்று விடும்.

அதேபோல இலங்கை கடற்பகுதியில் வலைகளை வீசினால் கடல் நீரோட்டம் இந்திய கடற்பகுதிக்கு வலைகளையும் படகுகளையும் கொண்டு வருவது இயற்கையாகவே நடக்கும் ஒன்று என்பதனை அறிவாளி பெருமக்கள் உணர வேண்டும்.

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாட்டு மீனவர்களுமே எல்லை தாண்டி மீன்பிடிப்பதை மேற்கொண்டு வருகிறார்கள்.


தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடலுக்குள் சென்று மீன் பிடிப்பதும், இலங்கை மீனவர்கள் கேரள கடல் பகுதி, லட்சத்தீவு மற்றும் மினிக்காய் தீவுகள் ஆகியவற்றில் மீன் பிடிப்பதும் வாடிக்கையான ஒன்றுதான்.

இந்தியா இலங்கை இடையே 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட இரு ஒப்பந்தங்களுக்குப் பின்னரும் கூட ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் வரை இருநாட்டு மீனவ மக்களும் எந்தப் பிரச்சனையும் இன்றி, இருநாட்டு கடல் பகுதிகளிலும் மீன்பிடித் தொழிலை செய்து வந்தனர்.

(தொடரும்)



தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# மன்சூர் அலிகான் மட்டும்தானா?



டி.எம்.மூர்த்தி

**நேரடியாகவும், மறைபொருளாகவும், சொற்களாலும், செயல்களாலும் நுட்பமான தாக்குதல் தொடுக்கப்பட்டு கொண்டே இருக்கிறது.**

இந்த நாட்டில் சிறுபான்மையினர், இறை மறுப்பாளர்கள், சாதிய படிநிலைகளை எதிர்ப்பவர்கள், சுரண்டலை ஒழிக்க செயல் படுபவர்கள், சுற்றுச்சூழலியலாளர்கள், அறிவியலை மட்டுமே முன்வைப்பவர்கள், ஆட்சேபனை குரல் எழுப்புபவர்கள் எல்லோர் மீதும் இந்தத் தாக்குதல் வருகிறது.

எந்தப் பக்கம் இருந்து தாக்குதல் வரும், எதனை கையில் எடுப்பார்கள், சொல்லப்படும் கருத்தை சிதைத்து, திரித்து சொன்ன நோக்கத்துக்கே நேர்மாறான அர்த்தம் கொண்டதாக எவ்வாறு மாற்றுவார்கள் என்று எளிதில் புரிந்து கொள்ள இயலாது.

ஒரு பக்கம் அது மேட்டிமைத்தனம் கொண்டதாக இருக்கும். வேறொரு வழியில் மரபுகளின் பெயரால் இருக்கும். வாயடைப்பதற்கான கீழ்த்தரமான தாக்குதலாகவும் இருக்கும்.

சொல்லும் பொய்களை எல்லாம் நியாயப்படுத்துவதற்கு, செயற்கை நுண்ணறிவு வரை அதி நவீன சாதனங்களை பயன்படுத்துவார்கள்.

ஒரே விஷயத்தை தனக்கு வேண்டியவர் செய்தால் அதற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டாடுவார்கள். தாக்கப்பட வேண்டியவர் என்று முடிவெடுத்து விட்டால், கூட்டமாக சேர்ந்து தமக்கான வேலைகளை பகிர்வு செய்து கொண்டு சல்லி சல்லியாக பிரித்தெறிவார்கள்.

பிக் பாஸ் என்ற பிரபலமான நிகழ்ச்சியில் நடப்பதை எல்லாம் யாரால் சகித்துக் கொள்ள முடியும்? நமது இயல்பான வாழ்க்கைக்கும் அங்கு நடப்பவற்றுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? அதை நடத்துபவர்களுக்கு பணம் கொட்டோ கொட்டு என்று கொட்டுகிறது. அதனை முன்னிறுத்தி அந்த வீட்டுக்குள் வாழும் மனிதர்களை மரப்பாவைகள் போல தமது விருப்பத்திற்கு ஏற்ப விளையாட வைக்கிறார்கள்.

ஆனால் அது மிகப் பலரால் பார்க்கப்படுகிறது. அதைத் தொகுத்து வழங்குவதற்கு கமலஹாசனும் வருகிறார். அது சரியாக இல்லை என்று சொல்பவர்களுக்கு பத்தாம் பசலி என்று பட்டம் சூட்டப்படுகிறது.

ஒரு திரைப்பட விழாவில் மன்சூர் அலிகான் எனும் நடிகர், தான் நடித்த படத்தில் எதிர்பார்த்தவாறு பெண் நடிகர்களுடனான காட்சிகள் அமைக்கப்படவில்லை என்று பேசினார்.

வணிக மயமாக்கப்பட்டுவிட்ட, கார்ப்பரேட் நிதி ஆதரவுடன் நடத்தப்படுகிற, தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகிற இத்தகைய மேடை நிகழ்ச்சிகளிலும், ரியாலிட்டி ஷோக்களிலும் அதேபோன்று பேசுவது இப்போது சாதாரணமாகப் போய்விட்டது. என்றாலும், அதனால் ஒரு பெண் பாதிக்கப்பட்டதாக உணர்ந்தால் அவருக்கு நீதிகோர அனைத்து உரிமைகளும் உண்டு.

வேறு நிகழ்ச்சிகளிலும் இவ்வாறு பேசப்படுகிறது என்பதாலேயே, அவரும் அவ்வாறே பேசலாம் என்று உடன்பட முடியாது. பெண்களையும், ஆண் பெண் உறவுகளையும் மலினப்படுத்தி, கொச்சையாகப் பேசும் எந்த ஒரு நிகழ்வும் கண்டிக்கப்பட வேண்டியதே ஆகும்.

மேடையில் பேசும்போதே அவர் தடுத்து நிறுத்தப்பட்டு இருக்க வேண்டும். இது போல பேசுபவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்திருக்கும். ஆனால் அந்தப் படத்தின் இயக்குனரும் படத்தில் நடித்தவர்களும் அவர் பேசியதை சிரித்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர். நிகழ்ச்சி முடிந்த பின்பு அதனை கண்டிப்பதாக அறிக்கை விடுகின்றனர்.

தேசிய மகளிர் ஆணையத்தின் உறுப்பினரான திருமதி குஷ்பு அவர்கள், மன்சூர் அலிகான் பேசிய கருத்துகள் குறித்து ஆணையத்தின் மூத்த உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளதாகவும், ஆணையம் நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறியுள்ளார். இதுபோன்ற இழிவான சிந்தனையுடன் உள்ள யாரும் தப்பிக்க முடியாது. இவரைப் போன்றவர்கள் சமூகத்தில் பெண்கள் குறித்து இழிவான கருத்துகளைக் கூறி வருகின்றனர் என காட்டமாக பதிவிட்டு இருந்தார்

அதைப்போலவே, தேசிய மகளிர் ஆணையம் தனது ‘எக்ஸ்’



சமூகவலைதளத்தில், நடிகை திரிஷாவை பற்றி நடிகர் மன்சூர் அலிகான் அவதூறாக பேசியது குறித்து கவலை தெரிவித்துள்ளது. “இந்த விஷயத்தில் நாங்கள் தானாக முன்வந்து, ஐபிசி பிரிவு 509 பி மற்றும் பிற தொடர்புடைய சட்டங்களைப் பயன்படுத்துமாறு டிஜிபிக்கு உத்தரவிடுகிறோம்” என்று பதிவிட்டுள்ளது.

அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுவது நல்லது.

அதே நேரத்தில் இதேபோன்று இன்னொரு படத்திற்கான அறிமுக விழாவில், உச்சநட்சத்திரமான ரஜினிகாந்த் அவர்கள் தான் நடித்த ஒரு படத்தில் இடம் பெற்ற பாடல் காட்சியில் தனக்கு ஒரே ஒரு மூவ்மெண்டோடு முடித்து விட்டதாகவும், அந்தப் பெண் நடிகருடன் தான் பேச கூட இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். அப்போதும் எல்லோரும் சிரித்து மகிழ்ந்து அதை வரவேற்றனர்.

திரைப்பட ஆண், பெண் நடிகர்கள் பற்றி நடிகரும் பத்திரிகையாளருமான ஒருவர் மிக மோசமான, இழிவான, கண்ணியக் குறைவான பதிவுகளை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்.

இவர்களைப் பற்றி எல்லாம் மகளிர் ஆணையம் ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? மகளிர் ஆணைய உறுப்பினர் அவர்கள் ஏன் ஒரு கண்டனம் கூட தெரிவிக்கவில்லை?

கர்நாடகாவில் ஹிஜாப் அணிந்து வந்ததற்காக பல நூறு இஸ்லாமிய மாணவிகள் தேர்வு எழுதவே அனுமதிக்கப்படாமல் அவருடைய எதிர்காலமே சீரழிக்கப்பட்டது. அந்த மாணவிகளைச் சூழ்ந்து கொண்டு கிண்டலும் கேலியும் பேசி பெரும் அச்சுறுத்தலை ஒரு கூட்டமே செய்தது. இவையெல்லாம் காணொளிகளாகவே வந்தன.

மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணமாக தெருக்களில் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டனர். இதுபோல இன்னும் பல சம்பவங்கள் நடந்திருப்பதாக அந்த மாநில முதல்வரே சொன்னார். இவற்றை எல்லாம் ஏன் மகளிர் ஆணையம் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை.

இப்போது ஆணைய உறுப்பினர் பொங்கி எழுவதும், உடனே ஆணையம் காவல்துறைக்கு உத்தரவு விடுவதும், சம்பந்தப்பட்ட நடிகரின் பெயர் மன்சூர் அலிகான் என்று இருப்பதால் தானா என சந்தேகம் எழுகிறது.

திருமதி குஷ்பூ அவர்கள், அவர் தற்போதுள்ள கட்சியில் சேர்வதற்கு முன்னால், சொன்ன ஒரு கருத்துக்காக அவர் மீது இந்துத்துவ மதவெறி சக்திகள் தொடுத்த துவேஷக் கணைகள் கொஞ்சம் நஞ்சமல்ல. ஏராளமான நீதிமன்றங்களில் அவர் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டன. காரணம் அவரும் பிறப்பால் ஒரு இஸ்லாமியர். அப்போதெல்லாம் தமிழ்நாட்டின் முற்போக்கு சக்திகள்தான் அவரை ஆதரித்து நின்றன.

திரைப்படங்களில் கொடூரமான வில்லன்களுக்கும் அவரது அடியாட்களுக்கும் முஸ்லிம் மற்றும் கிறித்துவ பெயர்கள் வைக்கப்படுவது தற்செயலானது அல்ல.

வடமாநிலங்களில், தனது மதத்தை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடிய எந்த ஒரு செயலையும் செய்ய முடியாத அச்சுறுத்தலுக்கு இன்றைக்கு முஸ்லிம்கள் ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். தமது பெயரை கூட வெளிப்படையாக சொல்வதை தவிர்க்கிறார்கள்.

தாக்குதல்களுக்கு பயந்து, இந்துக்கள் அதிகம் உள்ள பகுதிகளில் முதலீடு செய்ய மக்கள் விரும்பவில்லை. சந்தைகளில் பொருட்கள் வாங்க செல்வதில்லை

கடைக்காரர்கள் முஸ்லீம் பெயர்கள் அல்லது உருது எழுத்துகள் கொண்ட பலகைகளைப் பயன்படுத்துவதில்லை. இந்துக்கள் அடர்த்தியாக உள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் வீட்டு வேலை கட்டுமானம் இதர சிறு சிறு வேலைகளைச் செய்யும் முஸ்லீம் அங்கு செல்வதைக் குறைத்துள்ளனர்.

துணிச்சலான பத்திரிகையாளர் ஸ்வாதி சதுர்வேதி, “ஐ ஆம் எ ட்ரோல்” என்ற தனது நூலில், பாஜகவின் சமூக ஊடக உலகின் இருண்ட இடைவெளிகளை நமக்கு வெளிச்சமிட்டு காட்டுகிறார். இதன் போலிச் செய்திகளைத் தூண்டுவது, வெறுப்பைத் தூண்டுவது, மற்ற மதத்தினர் மீது சந்தேகத்தை வலுவாக விதைப்பது, மதவெறியை ஊட்டுவது, வன்முறையைத் தூண்டுவது மற்றும் ஜனநாயகத்துக்கு குழிபறிப்பது ஆகியவற்றில் ஆர்எஸ்எஸ் பாஜகவின் தொழில்நுட்பப் படை வெறிகொண்டு இயங்குகிறது.

நடந்து முடிந்த கர்நாடகா தேர்தலிலும், இப்போது நடக்கும் ஐந்து மாநில தேர்தல்களிலும் இஸ்லாமியர்களுக்கு எதிரான பொய்ச் செய்திகள் ஏராளமாக பரப்பப்பட்டு வருகின்றன. ‘வட மாநில தொழிலாளர்கள் திருப்பூரில் தாக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர் என்று சொல்லி ஆயிரக்கணக்கானவர்களை அச்சுறுத்தி சொந்த மாநிலத்துக்கு திரும்ப வைத்த அந்த ஒரு பொய்ச் செய்தி, அவர்களது சமூக ஊடகத்தின் வலிமை என்னவென்று நமக்கு தெளிவு படுத்துகிறது.

தனது பத்தாண்டு ஆட்சியில் சொல்வதற்குரிய சாதனை எதுவும் ஆர்எஸ்எஸ் பாஜக விடம் இல்லை. மக்களை பிளவு படுத்தி நிறுத்துவதற்கு மதவெறி வெறுப்பு அரசியலே அதற்கு ஒரே ஆயுதமாகிறது. கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளையும் தனது அதிகாரத்தால் பெரிதாக்கி, அதையே விவாதப் பொருளாக மாற்றுகிறது. எதிர் குரல்களை நசுக்குகிறது. கோடிக்கணக்கானவர்களை சென்றடையும் வண்ணம் நிமிடத்துக்கு ஒரு பொய் செய்தியை அந்தந்த மாநிலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப தயாரித்து பரப்புகிறது.

தமிழ்நாட்டில் அதற்கு மிகப்பெரும் ஆதரவு கிடைக்கவில்லை. தமிழர்களின் நல்லெண்ணம், நியாய உணர்வு, மனித நேயம் ஆகியவற்றையே தனது நரி தந்திரத்தின் மூலம் பலவீனங்களாக மாற்றி, வெறுப்பு அரசியலை திணிக்க வன்மத்தோடு தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

மன்சூர் அலிகான் பேச்சு அதற்கு இன்னொரு வாய்ப்பு!

## வினாடி - வினா

1 சென்னை உயர்நீதிமன்றம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

2 சென்னை உயர்நீதிமன்றம் தொடக்கத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?


3 சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியான முதல் இந்தியர் யார்?

4 சென்னை உயர்நீதிமன்றக் கிளை எந்த ஆண்டு, எங்கு தொடங்கப்பட்டது?

5 தற்போதைய உயர்நீதிமன்ற கட்டிடம் அதிகாரப்பூர்வமாக எப்போது திறந்துவைக்கப்பட்டது?

6 சென்னை உயர்நீதிமன்றத்தின் அலுவல், வழக்காடு மொழி எது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 34

## கெட்டிக்காரன் புளுகு

“இன்னும் சில வருடங்களில் உலகப் பொருளாதார சக்தியாக, உலகின் மூன்று சிறந்த பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா இருக்கும் என உத்தரவாதமளிக்கிறேன்” என்று பிரதமர் மோடி பேசியிருந்தார்.

அவ்வளவு பெருமை அடித்துக் கொள்வதற்கு நியாயம் இல்லை என்பதை, புள்ளியியல் நிலைக் குழுவின் தலைவராக இருப்பவரும், முன்னாள் இந்திய தலைமை புள்ளியியலாளருமான பிரபோத் சென், தற்போது தோலுரித்துக் காட்டியிருக்கிறார்.

இந்தியாவின் மொத்த உற்பத்தி குறியீட்டு எண் (ஜிடிபி), இந்திய பொருளாதாரத்தின் உண்மை நிலையையும், பெரும்பான்மை மக்கள் வாழ்க்கை நிலையையும் சரியாக வெளிப்படுத்தவில்லை என்பதை புள்ளி விவரங்களோடு அவர் விளக்கியுள்ளார்.

பொதுமக்கள் அத்தியாவசியமாக பயன்படுத்தும் பொருட்களை வரிசைப்படுத்தி, அவற்றின் விலையை அடிப்படையாகக் கொண்டு, நுகர்வோர் விலைவாசி குறியீட்டு எண் மற்றும் மொத்த விலை குறியீடு ஆகியவை கணக்கிடப்படுகின்றன. மோடி ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்த பொருட்களின் பட்டியலில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

ஆனால் இந்த ஆண்டுகளில் பொதுமக்கள் நுகர்பொருட்களில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்னால் பயன்படுத்தப்படாத பல பொருட்கள் தற்போது அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. எனவே பழைய கணக்கீட்டு முறை பொருளற்றது ஆகும்.

வேலை செய்து பொருள் ஈட்டுவதாக சொல்லப்படுவர்களின் எண்ணிக்கையில் 58% – அதாவது ஒன்பதரை கோடிப் பேர் – சுயதொழில் புரிபவர்களாவர். இவர்களில் பெரும்பாலோர் ஈட்டுவது அற்பத் தொகைகளே ஆகும்.

வெளிநாட்டு அதிபர்கள் வரும்போது குடிசைப் பகுதிகளை திரையிட்டு மறைப்பதை போல, இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் ஏழைகளாக உள்ளனர் என்று உண்மையை மறைத்து புள்ளி விவரம் தயாரிக்கப்படுவது அநீதி. ஜிடிபி வளர்ச்சி விகிதம் 7.8% என்பதும் ஒரு மாயையே ஆகும்.

58%பேர் சுய தொழில் செய்வது, இந்தியர்கள் தொழில் முனைவோர் ஆகிவிட்டதைக் காட்டுகிறது என்று சொல்வது அபத்தம். இவர்களின் வருமானம் வாய்க்கும் கைக்கும் கூட போதாது.

உலக வங்கி கணக்கின்படி வளர்ந்த நாடுகளில் தனி மனித வருவாய் ஆண்டுக்கு 13,200 டாலர்கள் ஆகும். அதாவது வேலை பார்ப்பவர்கள் எல்லோரும் சராசரியாக மாதத்திற்கு சுமார் ஒரு லட்சம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்று பெருமையடித்துக் கொள்ளும் மோடியால், இதே வருமானம் இந்தியர் எல்லோருக்கும் கிடைக்கும் என உத்தரவாதம் தர முடியுமா?

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் விழுந்த சிறு, குறு, நடுத்தர தொழில்கள் நிறுவனங்கள் இன்னும் நெருக்கடிக்குள் உழன்று கொண்டிருக்கின்றன. 2003 – 24 ஆண்டு காலத்தில் இவற்றின் உற்பத்தி 4.7 சதமாக சுருங்கிவிடும் எனும் பேராபத்து இருக்கிறது.

ஜிஎஸ்டி வரி வசூல் அதிகரிக்கிறது என்று பெருமைப்படுவதில் அர்த்தம் இல்லை. நலிவடைந்த பிரிவுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்களை எல்லாம் வெட்டுவதன் மூலம் இந்திய அரசுக்கு வருவாய் கூடலாம். ஆனால் பொருளாதார ரீதியாக உதவி தேவைப்படுபவர்களுக்கு, அதைத் தர மறுப்பது, அவர்கள் வாழ்க்கையில் பெரும் சேதத்தை ஏற்படுத்திவிடும். அவர்கள் மீதுதான் அதிகமாக ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது என்பது இன்னும் சோகம்.

அண்மை ஆண்டுகளில் நல்ல பருவச் சூழல் காரணமாக விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது என்பது உண்மை. ஆனால் அதன் பயன் விவசாயிகளுக்கோ, விவசாயத் தொழிலாளர்களுக்கோ சென்று சேரவில்லை என்ற உண்மையை மறைக்கக் கூடாது.

தனி நபர்களின் நுகர்வு, கடந்த சில ஆண்டுகளில் இது 9.6 சதவீதம் அதிகரித்துள்ளது என்பது வளர்ச்சியை காட்டுகிறது என்கிறார்கள். ஆனால் இந்தியாவின் பணக்காரர்களும் செல்வ செழிப்புமிக்கவர்களும் செய்யும் செலவு பல மடங்கு அதிகரித்து இருக்கும் நிலையில், ஏழைகளுக்கு வாங்க சக்தி இல்லாமல், அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதோடு அவர்களது சந்தை சுருங்கி விடுகிறது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத உச்சத்துக்கு சென்றிருக்கிறது. இறக்குமதி பொருட்களை பயன்படுத்துவது சாமானியர்கள் அல்ல. அதுமட்டுமல்ல, உள்ளூர் பொருட்களை புறக்கணித்துவிட்டு வெளிநாட்டு பொருள்களை வாங்குவதால், உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு, இன்னும் அதிக வேலையின்மைக்கும், சாமானியர்களின் வருவாய்க் குறைவுக்கும் வழி வகுக்கிறது.

திருப்பூர் பனியன், ஆயத்த ஆடைகள் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது போய், இன்று இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஆயத்த ஆடைகள் விற்பனைக்கு வருகின்றன. இதனால் திருப்பூர் தொழில் நலிவடைகிறது என்பது இதற்கு சிறந்த உதாரணம்.

“கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு” என்பது தமிழ் வாக்கு!

## வலைப் பூக்கள்

கஞ்சா வித்த காட்டை அழித்த ஜக்கிக்கு அழைப்பு இருக்கு இந்தியாவுக்காக முதன்முதலாக 1983ல் உலக கோப்பையை வென்றுவந்த கபிலுக்கு இடமில்லை சங்கிகளின் ஆட்சியில்.




2022 - 2023 ல், இந்தியாவில் அதிக வரி செலுத்திய முதல் 10 நிறுவனங்கள்

1. டாடா கன்சல்டன்சி
2. டாடா ஸ்டீல்
3. JSW ஸ்டீல்
4. LIC
5. ரிலையன்ஸ்
6. இண்டியன் ஆயில் கார்பரேஷன்
7. இன்ஃபோஷிஸ்
8. ITC
9. ஹிந்துஸ்தான் Zinc
10. NTPC

இதில், அதானி குழுமங்களின் நிறுவனம் ஏதாவது ஒன்று இருந்தால் - கண்டுபிடித்துச் சொல்லுங்கள்.



1 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாயக விரோதம் ஆகும்! மக்கள் விரோதம் ஆகும்! மனச்சாட்சி விரோதம் ஆகும்! அனைத்திற்கும் மேலாக இந்த சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானதாகும்!

### முட்டுக்கட்டை போடும் ஆளுநர்

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக இருப்பவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்; தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒன்றிய அரசிடம் அவருக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டுக்கான நிதியை வாங்கித் தருவதற்கு முயற்சிக்கலாம்; ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையைப் பெற்றுத்தரலாம்; எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு உரிய நிதியை வாங்கித் தரலாம்; புதிய ரயில்வே திட்டங்களைப் பெற்றுத் தரலாம்; மாநில ஆட்சிக்கும், ஒன்றிய அரசுக்கும் பாலமாக இருக்கலாம். ஆனால், இதில் எதையும் செய்யாமல், மாநில அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என நாள்தோறும் யோசித்து யோசித்து செயல்பட்டு வருகிறார்.

அதோடு, தினந்தோறும் யாரையாவது கூட்டி வைத்துக் கொண்டு அவர் வகுப்பு எடுக்கிறார். வகுப்பு எடுக்கட்டும், தவறில்லை. அதில் மொத்தமும் தவறான பாடங்களைச் சொல்லித்தந்து கொண்டு இருக்கிறார்.

விழாக்களுக்குச் செல்கிறார். செல்லட்டும்! ஆனால் விதண்டாவாதக் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அரசின் கொள்கைகள் குறித்து பொதுவெளியில் விளக்கம் அளிப்பதும் விவாதம் செய்வதும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகு அல்ல.

தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் திராவிடக்கொள்கை, சமத்துவம், சமூகநீதி, பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை ஆகியவை மக்களின் மனங்களில் இருப்பது அவருக்கு ஏற்கவியலாத ஒன்றாக உள்ளது.

பொது மேடைகளில் அவர் நமது தமிழ்ப்பண்பாடு, இலக்கியம் மற்றும் சமூக அமைப்பிற்கு எதிரான கருத்துகளையும் தெரிவித்து வருகிறார். தெரிவித்துக் கொண்டும் வருகிறார். அவரது அபத்தமான கருத்துகளுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மறுப்பு செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகிறார்கள்.

அவர் தெரிவிக்கும் கருத்துகளை வைத்துப் பார்க்கும்போது, அவருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத்துக்குமான பிரச்சினை என்பது நாம் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களில் மட்டுமல்ல; சமூகநீதியாகவும் இருக்கிறது. அதனால்தான் முடிந்தளவு அனைத்து வகையிலும் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்.

அவருக்கு முடிந்த வரை அனைத்து வகையிலும் நாம் உணர்த்திக் கொண்டு வருகிறோம். தமிழ்நாடு வளர்ந்திருப்பதை வளர்வதைக் காணப் பொறுக்காத காரணத்தினால்தானோ என்னவோ, ஆளுநர் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார் என்று நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள்.

“அரசியல் சட்டத்திற்கு முழுவதும் மாறாக, அரசுடன் ஆளுநர் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். எனவே, அவருக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்” என்று மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

### உச்சநீதிமன்றம் சென்றது ஏன்?

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தி உள்ளார்கள். நானும் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு இப்பிரச்சினை குறித்து கடிதம் எழுதியிருக்கிறேன். இந்த அனைத்து முயற்சிகளும் எவ்வித பயனும் தராததால்தான், தமிழ்நாடு அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தின் கதவுகளை தட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் அனைத்துக் கோப்புகள், சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட விவரங்களைக் குறிப்பிட்டு, மாண்பமை உச்சநீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது.

தமிழ்நாடு அரசு எடுத்துரைத்த வாதங்களைக் கவனித்துக் கேட்ட மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநரின் செயல்பாடுகள் குறித்து தெரிவித்த கருத்துகள், தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு கிடைத்த முதற்கட்ட வெற்றியாகும். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் இத்தருணத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவசர அவசரமாக 10 சட்ட முன்வடிவுகளுக்கு எவ்வித ஒப்புதலும் வழங்காமல், கடந்த 13.11.2023 அன்று கோப்புகளைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்குத்தான் முழு அதிகாரமும் முதன்மையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 200ன்படி, இந்தச் சட்டமுன்வடிவுகளை மீண்டும் பரிசீலித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கும் அதிகாரம் இந்த மாமன்றத்திற்குத்தான் உள்ளது.

அந்த அடிப்படையில்தான், இந்த 10 சட்டமுன்வடிவுகளும் இன்றைக்கு உங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மக்களாட்சி தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டும்

ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, இந்திய நாடு இதுவரை கண்டிராத முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி, மக்களின் எண்ணங்களில் இடம் பிடித்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இதனை அரசியல் ரீதியாக சகித்து கொள்ள இயலாத சிலர், அரசு நிர்வாகத்தை முடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளுநர் என்ற உயர்ந்த பதவியின் மூலமாக அரசியல் செய்ய விரும்புகிறார்கள்.

ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும் அது இருக்கும் வரை மக்களாட்சித் தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டியதுதான் மரபு ஆகும்.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில், ஆளுநர்களின் மூலமாக குடைச்சல் கொடுத்து வருகிறார்கள். இப்போது மாண்பமை உச்சநீதிமன்றம் தலையில் ஓங்கி குட்டு வைத்தவுடன் அவசர அவரமாக கோப்புகளைத் திருப்பி அனுப்புவதும், சில கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதும் என நாடகம் ஆடுகின்றார் ஆளுநர்.

அவருக்கு தெரிந்ததை அவர் செய்கிறார். செய்துவிட்டுப் போகட்டும். ஆனால் நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200ன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன் இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

# பாலஸ்தீனர்கள் மீதான படுகொலை போர்! அம்பலமாகும் இஸ்ரேலின் பொய்கள்!



வ.மணிமாறன்

**காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலை நியாயப்படுத்தி வெளியிட்டு வரும் காணொளிகள், செய்திகள் கட்டுக்கதைகள் என்பது அம்பலமாகி வருகின்றன.**

அக்டோபர் 7 முதல் காசா மீது பெரும் தாக்குதலைத் தொடுத்துள்ளது இஸ்ரேல். மருத்துவமனைகள், உணவகங்கள், தண்ணீர் தொட்டிகள் என எதையும் விட்டு வைக்காமல் குண்டு மழை பொழிந்து வருகிறது இஸ்ரேல் ராணுவம். அகதிகள் முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலால், அவை மண் மேடுகளாக சிதிலமடைந்து விட்டன. சொந்த மண்ணிலேயே போரை அறிவித்து மிக கொடூரமான இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்தப் படுகொலை தாக்குதலில் நவம்பர் 21 வரை (46 நாட்களில்) 5,600 குழந்தைகள் உட்பட 13,515 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 32,750 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில், நோவா இசை நிகழ்ச்சியில் இஸ்ரேலியர்கள் பலரின் உயிரைப் பறித்தது இஸ்ரேல் ராணுவமே என்பது அந்நாட்டு காவல்துறையின் விசாரணையில் தெரியவந்திருப்பதாக 'ஹாரெட்ஸ்' என்ற இஸ்ரேலிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் மீதான 'தற்காப்புத் தாக்குதல்' என்ற பெயரில், பயந்து ஓடிய இஸ்ரேலியர்கள் மீதும் அவர்களின் வாகனங்கள் மீதும் இஸ்ரேல் ராணுவம் ஹெலிகாப்டர் மூலம் அவர்களைப் பிடித்து வைத்திருந்த ஹமாஸ் அமைப்பினரும் கொல்லப்பட்டனர். 12 வயதான லீல் ஹெஸ்ரோனி என்ற சிறுமி, அதன் சகோதரர் யானாய், உறவினர் அய்லா ஆகியோர் செத்து மடிந்தனர். இடிந்து விழுந்த வீட்டிலிருந்த சிறுமியின் உடலைக் கூட மீட்க முடியவில்லை.

அக்டோபர் 7 அன்று தாக்குதல் நடத்திய ஹமாஸ், இஸ்ரேலின் ஸ்டெரோட் காவல் நிலையத்தையும், அங்கிருந்த இஸ்ரேலிய காவல்துறையினரையும் சிறைபிடித்து வைத்திருந்தனர். அங்கும் இஸ்ரேல் ராணுவ டாங்கிகளின் குண்டு மழையில் காவல் நிலையம் தகர்க்கப்பட்டது. அங்கிருந்த இஸ்ரேல் காவல்துறையினரும் ஹமாஸ் அமைப்பினருடன் கொன்று குவிக்கப்பட்டனர். அதன் பிறகு அங்கு சென்ற இஸ்ரேல் ராணுவம் சிதிலமடைந்திருந்த காவல் நிலையத்தையும் புல்டோசர் மூலம் இடித்து தரைமட்டமாக்கியது. மொத்தப் பழியும் ஹமாஸ் மீது போடப்பட்டது.

ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலிய மக்கள் மற்றும் காவல்துறையினர் 1,200 பேர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்தது. இஸ்ரேலியர்கள் என நினைத்திருந்த 200 பேரின் உடல்கள் பாலஸ்தீனர்களாகவோ ஹமாஸ் அமைப்பினராகவோ இருக்கலாம் என இஸ்ரேல் செய்தித் தொடர்பாளர் மார்க் ரெகெவ் தெரிவித்தார்.

உண்மையில், அக்டோபர் 7 அன்று நடந்த மோதலில் ஹமாஸால் எத்தனை பேர் கொல்லப்பட்டனர்? இஸ்ரேலிய ராணுவத்தால் எத்தனை பேர் கொல்லப்பட்டனர்? என்பது தெரியவில்லை. எப்படி இருப்பினும், சொந்த நாட்டு மக்களையே இஸ்ரேல் ராணுவம் கொன்று குவித்திருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் குழுவினர் அக்டோபர் 7 அன்று இஸ்ரேல் மீது தாக்குதலைத் தொடுத்தனர். இந்த தாக்குதலின் போது பல இஸ்ரேலியர்களின் உயிரைப் பறித்தது இஸ்ரேல் ராணுவம் தான் என்ற அதிர்ச்சி செய்தி வெளியாகியுள்ளது.

அடுத்து, காசா பகுதியில் உள்ள மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் நடத்தி, நோயாளிகளும் குண்டு வீச்சில் படுகாயமடைந்த பாலஸ்தீனர்களும் சிகிச்சை கூட பெற முடியாமல் இஸ்ரேல் தவிக்க விட்டது. அதனை நியாயப்படுத்துவதற்காக மருத்துவமனைக்குள் பதுங்கு குழிகள் அமைத்து ஹமாஸ் செயல்பட்டு வருவதாக இஸ்ரேல் குற்றம்சாட்டியது.

இப்படித்தான் அல் ஷிஃபா மருத்துவமனைக்குள் பதுங்கு குழிகள் இருப்பதாகவும், அங்கிருந்து ஹமாஸ் செயல்படுவதாகவும் கூறி இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில் அந்த மருத்துவமனையே சுடுகாடு போல் காணப்படுவதாக ஐ.நா. செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். சிகிச்சை பெற்று வந்த 179 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.





பாலஸ்தீனர்கள் வீடுகளை இழந்து உணவு, தண்ணீரின்றி, தங்களின் உயிர் எப்பொழுதும் பறிக்கப்படலாம் என்ற சூழலில் ஓடிக்கொண்டிருக்கின்றனர். மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டிருந்த ஐ.நா. ஊழியர்கள் 120 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் படுகொலைப் போரை, அதன் பயங்கரங்களை வெளி உலகிற்குச் சொன்ன பத்திரிக்கையாளர்கள் 35 பேர் செத்து மடிந்துள்ளனர்.

இந்நிலையில், 'பாலஸ்தீனர்கள் மீதான படுகொலைப் போரை இஸ்ரேல் அரசே உடனே நிறுத்து' என வலியுறுத்தி உலகம் முழுவதும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். யூதர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், கம்யூனிஸ்டுகள், பல்வேறு மொழி, இன மக்கள் என அத்தனை பேரும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த எதிர்ப்புக் குரல் வளையை நெரிக்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசுகள் முயன்று வருகின்றன.

இந்நிலையில் இஸ்ரேலும் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளின் ஊடகங்களும் பரப்பிய பொய் மூட்டைகள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

முதலாவது, அக்டோபர் 7 அன்று நடந்த மோதலில் பெருமளவிலான இஸ்ரேலிய மக்களை இஸ்ரேல் ராணுவம் தான் கொன்று குவித்தது என்பது ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது.

இரண்டாவதாக, அல் ஷிபா மருத்துவமனைக்குள் இருந்த பதுங்கு குழிகளை கட்டியது இஸ்ரேல்தான் என்பதும் தெரியவந்துள்ளது.

அக்டோபர் 7 அன்று காசா எல்லைப் பகுதி அருகே, இஸ்ரேலியர்களின் நோவா இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது ஹமாஸ் நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்து விட்டதாக இஸ்ரேல் ராணுவம் கூறியது. அதனைத் தொடர்ந்து காசா மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்திய காணொளியையும் வெளிவந்துள்ளது.

ஹமாஸ் தாக்குதலில் நோவா இசை நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த 364 பேர் கொல்லப்பட்டதாகவும், ரமாத் டேவிட் தளத்திலிருந்து அங்கு வந்த இஸ்ரேலிய போர் ஹெலிகாப்டர், ஹமாஸ் குழுவினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் மட்டுமே இஸ்ரேல் கூறி வந்தது.

**இஸ்ரேலியர்கள் பலரும் தங்கள் நாட்டு ராணுவத்தாலேயே கொல்லப் பட்டதை முதல் முறையாக இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது.**

காசா எல்லைக்கு அருகிலுள்ள பீரி எனும் இடத்தில் தங்கள் நாட்டு மக்களையே இஸ்ரேல் ராணுவம் கொன்றுள்ளது. அப்போது, இஸ்ரேலியர்கள் சிலரை பணயக் கைதிகளாக ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்திருந்தனர். அங்கு வந்த இஸ்ரேல் ராணுவம் பணயக்கைதிகளின் உயிரைப் பற்றி துளி கூட கவலையின்றி, தொடர் துப்பாக்கிச்சூடும் டாங்கிகள் மூலம் குண்டு மழையும் பொழிந்தது. இதில் பணயக் கைதிகளாக இருந்த இஸ்ரேலியர்களும்

அல் ஷிஃபா மருத்துவமனை பதுங்கு குழி கட்டமைப்புக்குள் இரண்டு பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் கொண்டு சென்றதற்கான ஆதாரம் என்று காணொளி ஒன்றை இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டது. ஆனால் அந்த மருத்துவமனை மீதான தாக்குதலுக்குப் பிறகு "இரண்டு பணயக்கைதிகளை இன்னும் கண்டுபிடிக்கவில்லை, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியாது" என இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி கைவிரித்து விட்டார்.

அல் ஷிஃபா மருத்துவமனையை ஹமாஸ் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக செவிலியர் ஒருவர் பேசும் காணொளியை இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டது. அந்த செவிலியர் அல் ஷிஃபா மருத்துவமனையில் பணியாற்றவில்லை என்பதும் அந்தக் காணொளி அங்கு எடுக்கப்படவில்லை என்பதும் உண்மை அறியும் ஆய்வில் (Fact Check) தெரியவந்துள்ளது.

அல் ஷிஃபா மருத்துவமனை ஹமாஸ் கட்டுப்பாட்டு தலைமையகமாக இருந்தது என்பதற்கான ஆதாரமாக இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள காணொளிகள் அனைத்தும் முரண்பாடாகவும் உண்மை அறியும் ஆய்வில் உறுதி செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத் தகுந்தது. மேலும், அல் ஷிஃபா மருத்துவமனைக்கு சர்வதேச பத்திரிகையாளர்களை இஸ்ரேல் அழைத்துச் செல்லாததும் சந்தேகங்களை உறுதிப்படுத்துகிறது.

சி.என்.என் தொலைக்காட்சிக்கு

தொடர்ச்சி 9ஆம் பக்கம்



**"அவர்களிடம் போர் விமானங்கள் இல்லை; விமான எதிர்ப்பு கருவிகள் இல்லை; கடற்படை இல்லை; கவச வாகனங்கள் இல்லை; தரைப்படை இல்லை; போர் நடத்துவதற்கான ஆயுதங்கள் இல்லை; போர் நடத்துவதற்கான தளபதிகளில்லை; ராணுவமும் கூட இல்லை. அவர்கள் மூச்சு திணறும் அளவுக்கு நெருக்கமாக கூடியுள்ள அகதிகள் முகாம்கள் மீதும் மருத்துவமனைகள் மீதும் பள்ளிக்கூடங்கள் மீதும் மசூதிகள் மீதும் குடியிருப்பு பகுதிகள் மீதும் மிக நவீனமான போர் விமானங்களைக் கொண்டும், போர்க்கப்பல்களைக் கொண்டும் குண்டு மழை பெய்கிற இஸ்ரேல், இதனைப் போர் என்று சொல்கிறது"**

**"இது போரல்ல; படுகொலை"**

**நோம் சாம்ஸ்கி**



கோகுல் கௌதம்

திரை விமர்சனம்




**ஆட்சியாளர்கள் பழங்குடி மக்களிடம் நிகழ்த்தும் அரச வன்முறைகள், காவல்துறை பழங்குடி மக்களிடம் நிகழ்த்தும் மனித உரிமை மீறல்கள் ஆகியற்றை எதிர்த்து அம்மக்கள் சினிமாவை ஒரு ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள்.**

சினிமா எனும் கலை, வெறும் பொழுதுபோக்கு கருவி மட்டுமல்ல. மக்கள், தங்கள் உரிமைப் பெற நடத்தும் போராட்டதிற்கு பயன்படக்கூடிய மிகப்பெரிய ஆயுதம் என்பதை நமக்கு உணர்த்துகிறது ஜிகர்தண்டா–2.

அமைச்சர் கார்மேகத்திற்கு பக்கபலமாக உள்ளவர் மதுரை ரவுடி அலியஸ் சீசர். செய்யாத கொலைக்காக, கிடைத்த காவலர் பணியை இழந்து சிறையில் வாடுகிறார் கிருபாகரன். அடுத்த முதல்வருக்கான போட்டியில் தனக்கு எதிராக இருக்கும் அமைச்சர் கார்மேகத்தை வீழ்த்த, அவருக்கு பக்கபலமாக உள்ள ரவுடிகளை கொல்ல, யானை தந்த கடத்தல்காரன் சட்டானியைப் பிடிக்க காட்டில் உள்ள காவலர் ரத்னகுமாரை பணிக்கிறார், நடிகரும், அரசியல்வாதியுமான ஜெயகொடி. ரத்னகுமார் கிருபாகரனை தேர்ந்தெடுக்க, தண்டனையிலிருந்து தப்பிக்க அலியஸ் சீசரை கொல்ல ஒப்புக்கொள்கிறார் கிருபாகரன்.

ஒரு நடிகர் தனது நிறத்தை குறித்து கிண்டல்செய்ததால் சினிமாகதாநாயகனாக ஆக விரும்புகிறார் அலியஸ் சீசர். அவரைக் கொல்ல சினிமா இயக்குனர் ரே தாசனாக, அலியஸ் சீசரின் வீட்டினுள் நுழைகிறார், கிருபாகரன். அலியஸ் சீசர் கொலை செய்யப்பட்டாரா? இல்லையா? என்பதே மீதிக்கதை.

ஜிகர்தண்டா முதல் பாகத்தை ஒரு கேங்க்ஸ்டர் படமாக எடுத்த கார்த்திக் சுப்புராஜ், இம்முறை முதல் பாகத்தின் மையக் கருவை மட்டும் எடுத்துக்கொண்டு, காடு, பழங்குடிகள், அரசியல், நடிகர் என சேர்த்து இதை ஒரு அரசியல் படமாக எடுத்துள்ளார்.

மதுரை ரவுடி அலியஸ் சீசராக ராகவா லாரன்ஸ், இயக்குனர் ரே தாசனாக எஸ்.ஜே.சூர்யா, அலியஸ் சீசரின் மனைவி மலையரசியாக நிமிஷா சஜயன், அமைச்சர் கார்மேகமாக இளவரசு, நடிகர் மற்றும் அரசியல்வாதி ஜெயக்கொடியாக சைன் டாம் சாக்கோ, நவீன் சந்திரா, சஞ்ஜனா நடராஜன், அரவிந்த் ஆகாஷ், சத்யன் எனப் பலர் நடித்திருக்கின்றனர். மேலும் ஹாலிவுட் நடிகர் கிளின்ட் ஈஸ்ட்வுட்டின் சிறப்பு தோற்றமும் அனிமேஷன் வடிவில் உள்ளது!

'இக்கதையில் வரும் யாவும் கற்பனையே' என்று குறிப்பிட்டாலும், சில கதாபாத்திரங்கள், நமக்கு சில உண்மை மனிதர்களை நினைவூட்டுகின்றன. கதை 1975ல் நடக்கிறது. ஆனால் அதன் உள்ளடக்கம், நமக்கு 90 களை நினைவூட்டுகிறது.

பொதுவாகவே தமிழில் வரும் இரண்டாம் பாகப் படங்கள் மிகவும் மோசமாக இருக்கும் என்ற கருத்தை ஜிகர்தண்டா–2 உடைத்துள்ளது.

படத்தின் முதல் பாதி, மதுரை ரவுடி, அவனுடைய அரசியல் தொடர்புகள், அவனை வைத்து படமெடுப்பது என செல்ல, இரண்டாம் பாதி காடு, பழங்குடி மக்களின் வாழ்வியல், அவர்களின் நம்பிக்கை, யானைத் தந்தங்களை திருடும் கொள்ளையன் சட்டானிக்கும், அவனைப் பிடிப்பதற்காக தேடுதல் பணியில் ஈடுபடும் காவலர்களுக்கும் இடையில் அல்லலபடும் பழங்குடி மக்கள், காவலர்கள் பழங்குடி யினரிடம் நிகழ்த்தும் அத்துமீறல்கள், யானைத் தந்த கடத்தலுக்கு பின்னால் உள்ள அரசியல் என கதை வேறு ஒரு தளத்திற்கு செல்கிறது.

படத்தின் முதல் பாதியை விட இரண்டாம் பாதி மிகவும் விறுவிறுவெனவும், இறுதியில் உணர்வுப்பூர்வமாகவும் செல்கிறது.

படத்தை இயக்கியுள்ள இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ், பழங்குடி மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்வது, கதாபாத்திரங்களின் வடிவமைப்பு, காட்சி அமைப்பு என சிறப்பாக செயல்பட்டுள்ளார்.

படத்தில் நடித்துள்ள நடிகர்கள் தங்களது பாத்திரங்களை சிறப்பாக செய்துள்ளனர். குறிப்பாக, கதையின் முக்கிய இரண்டு பாத்திரத்தில் நடித்த ராகவா லாரன்ஸ் மற்றும் எஸ்.ஜே.சூர்யா ஆகியோர். இரக்கமில்லாத ரவுடியாக, பின்னர் மக்கள் ஆபத்தில் இருக்கும் போது, ஏதும் செய்ய முடியாமல் தவித்து கண்ணீர் விடுவது என ராகவா லாரன்சும், கோழையான ரே தாசன், தனது பயத்தை உள்ளே வைத்துக்கொண்டு அலியஸ் சீசர் முன் தன்னை தைரியமாக காட்டிக்கொள்வது என எஸ்.ஜே.சூர்யாவும் சிறப்பாக நடித்துள்ளனர்.

படத்தின் ஒளிப்பதிவாளர் திரு அவர்களின் பணி சிறப்பாக உள்ளது. குறிப்பாக காட்டினுள் நடக்கும் காட்சிகள்.

கலை இயக்குனரின் பணி நம்மை கதை நடக்கும் காலத்திற்கே அழைத்து செல்கிறது.

படத்தின் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் பின்னணி இசையும், பாடல்களும் ரசிக்கும் படியாக உள்ளன.

படத்தில் நடித்துள்ள பிறமொழி நடிகர்களின் நடிப்பு சிறப்பாக இருந்தாலும், அவர்களின் தமிழ் உச்சரிப்பு, சில நேரங்களில் புரிந்து கொள்ள கடினமாக உள்ளது.

படத்தின் நீளம், சில லாஜிக் மீறல்கள், இரண்டாம் பாதியில் அலியஸ் சீசரின் திடீர் மனமாற்றம் ஆகியவை சிறு குறைகளாக இருந்தாலும், அதையும் மீறி படம் நம்மை உட்கார்ந்து பார்க்க வைக்கிறது.

இத்திரைப்படம் எழுப்பும் கேள்வி ஒன்று தான். "கோமாரே. ஏன்? "

தொடர்புக்கு: 8870564809

# மேல்மா விவசாயிகள் மீதான வழக்குகளை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறுவட்டம் மேல்மா மற்றும் இதை ஒட்டி 9 கிராமங்களில் உள்ள 3174 ஏக்கர் நிலத்தை தமிழக அரசு 3வது தொழில் பூங்கா அமைக்க விவசா யிகள் ஒப்புதல் இன்றி வலுகட்டாயமாக கையகப்படுத்துவதை எதிர்த்து கடந்த ஜூலைமாதம்2ஆம்தேதிமுதல்இப்பகுதி விவசாயிகள் போராடிவருகின்றனர்.

இந்த நிலையில் நவம்பர் மாதம் 4 அன்று செய்யாறில் உள்ள சார் ஆட்சியரை சந்தித்து கோரிக்கை மனுவை கொடுப்பதற்கு ஊர்வலமாக சென்ற விவசாயிகளை காவல்துறை பலாத்கார நிலையில் தடுத்து போலீஸ் வாகனத்தில் ஏற்றி அங்கிருந்து அப்புறப்படுத்தி திருமண மண்டபத்தில் அடைத்துள்ளனர். 96 பெண்கள் உட்பட 147 பேர்கள் மீது வழக்கு போட்டு, 19 பேர்களை தமிழகத்தின் பல்வேறு சிறைகளில் அடைத்துள்ளனர்.

இவர்களில் அருள், பச்சையப்பன், மாசிலாமணி, பாக்கியராஜ், சோழன், பெருமாள், தேவன் ஆகிய ஏழு பேர்கள்மீது திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிந்துரையின் பேரில் மாவட்ட ஆட்சியர் குண்டர் சட்டத்தில் வழக்கு போடு இக்குடும்பத்தினருக்கு நோட்டீஸ் கொடுத்துள்ளனர். கைது செய்து சிறையில் அடைத்து வைத்துள்ளதோடு.. குண்டர் சட்டத்தில் வழக்கு பதிவு செய்வது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

குண்டர் சட்டம் என்பது, தொடர்ந்து பல்வேறு சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோரை கண்டறிந்து.. இந்த சிறை தண்டனை மூலம் கட்டுப்படுத்துவதற்குதான் இந்த சட்டம். இவ்விவசாயிகள் மீது எந்த ஒரு சட்டமீறல் நடவடிக்கை, வழக்குகள் இல்லாத பொழுது திட்ட மிட்டே இவர்களை இச்சட்டத்தின் மூலம் முடக்கிவிட்டு, மூன்றாவது சிப்காட்டிற்கான நிலத்தை எடுப்பதற்கே இந்த நடவடிக்கை. நிலமெடுப்பை தடுக்கும் எவருக்குமே இப்படியான தண்டனை என எச்சரிக்கையாக இது அமைந்திருக்கிறது.

நிலம் என்பது வெறும் மண் அல்ல, வேளாண் உற்பத்திக்கும், விவசா யிகளின் வாழ்விற்கும், வாழ்வின் பாதுகாப்பிற்கும் அடிப்படை என்பதை அதிகாரிகள் உணராமல் இருக்கலாம். ஆட்சியாளர்கள் அறியாமல் இருக்கலாமா!

இதை மனிதநேய முறையில் அணுகாது, விவசாயிகளின் நிலத்தை பறிப்பது என்பது அந்த குடும்பத்தின் வாழ்வை பறிப்பதற்கு ஒப்பாகும்.

பன்னெடும் காலமாய், அதில் அன்றாடம் உழன்று மனதார நேசித்து வரும்தன் நிலத்தை காத்திட அமைதி வழியில் கடந்த நான்கு மாதங்களுக்கும் மேலாக போராடிய விவசாயிகளிடம் பேசி அவர்களின் கருத்தறிந்து பிரச்சனைக்கு உரிய சுமுக தீர்வு காண வேண்டிய அதிகாரிகள், அதிகாரம் கொண்டு அடக்கிடும் வழிமுறையை கையாள்வது வெட்கக்கேடானது.

இப்படியான நடவடிக்கை என்பது..செய்யாறு பகுதி மட்டுமல்ல தமிழ்நாட்டில் நில உரிமைகளை காக்க போராடும் ஒட்டுமொத்த விவசாயிகளுக்கு எதிராக விடப்பட்ட சவாலாகும். இந்த நடவடிக்கையை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட அனைத்து பகுதியினரும் கண்டித்த நிலையில் ஆறு பேர் மட்டும் குண்டர் சட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு தமிழக அரசை பாராட்டுகிறோம்.

ஆனால் அவர்களை விடுவிப்பதற்காக, அந்த குடும்பத்தினரிடம் பயமுறுத்திமன்னிப்பு கடிதம் எழுதி வாங்கியது என்பதும், ஊடகபேட்டியும், உள்ளூர் அமைச்சரின் ஈடுபாட்டைவெளிப்படுத்துகிறது.

தமிழகத்தில் இதுவரை சிப்காட்டிற்கும், சிட்கோவுக்கும் எடுக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள்.. இதற்கான தொழில் கூடங்கள் அமைக்கப்படாமல் வீணாக கிடைக்கின்றன. இதில் தொழில்கூடங்களும் இல்லை, வேளாண் உற்பத்தியும் நடைபெறவில்லை. இப்படி தரிசாக விடப்பட்ட நிலத்தை திரும்ப அந்த விவசாயிகளிடமே கொடுத்திட வேண்டும் என்கிற நீதிமன்ற ஆணை இருந்தும் அதைப்பற்றி கவலைப்படாது, மேலும் மேலும் நிலம் எடுப்பது எதற்கு?

விவசாயிகளின் விருப்பம் இல்லாமல் இப்படிநிலத்தை பறிப்பது என்பது ஒரு கட்டத்தில் மிகப்பெரிய வேளாண் உற்பத்தி முடக்கத்தையும், வெளியேற்றப்படும் விவசாயிகளால் சமூக சமன்பாடு வாழ்வும் குலையும். இதைஅரசு அறிந்திட வேண்டும்.

இந்த நிலையில் தமிழக அரசு பொறுப்பேற்று நிறைவேற்றி இருக்கிற நில ஒருங்கிணைப்புச் சட்டம் 2023, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் எதிர்த்து இயக்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த சட்டத்தை திரும்ப பெற்றிட வேண்டும்.

எனவேஇவர்கள் அனைவரையும் வழக்கிலிருந்து விடுவித்திட வேண்டும். இப்பகுதியில் நிலம் கையகப்படுத்தும் திட்டத்தை விவசாயிகளின் ஒப்புதலின்றி கையகப்படுத்தக் கூடாது என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் என்று பி. எஸ். மாசிலாமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நூலகத் தந்தை அரங்கநாதன்

கணித பேராசிரியர் சீர்காழி ராமாமிர்தா அரங்கநாதன் நூலக ஆராய்ச்சி கட்டுரைகள் பல படைத்தவர். நூலக நூல்களை வகைப்படுத்தும் கோலன் முறையை உருவாக்கியவர். மக்களிடையே நூலக விழிப்புணர்வு ஏற்படுத்தியவர். நூலக அறிவியலில் தந்தை என்று போற்றப்பட்டவர். இந்திய புள்ளியில் துறையில் சாதனை படைத்தவர்.

சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் இளநிலை இன்டர்மீடியட்ஸ் வகுப்பில் சேர்ந்து தேர்ச்சி பெற்றார். அடுத்து இளங்கலை பட்ட படிப்பில் சேர்ந்து 1913ல் பட்டம் பெற்றவர். 1916 இல் அதே கல்லூரியில் கணிதத்தில் முதுகலை பட்டம் பெற்றார். அதன்பின்னர் ஆசிரியர் பயிற்சியும் எல் டி தேர்ச்சி பெற்றார்.

அரங்கநாதன் நூலக அறிவியல் பயிற்சிபெற வேண்டும் என்று கருதிய சென்னை பல்கலைக்கழகம் அவரை லண்டனுக்கு அனுப்பி வைத்தது . ஐரோப்பிய நூலக நடைமுறைகளை கண்டறிந்தார். நூலகங்களில் பின்பற்றிய பத்தடுக்கு முறையில் குறைபாடுகள் இருப்பதைக் கண்டார். அதனால் ஒரு மாற்று முறையை உருவாக்க முயன்றார். அம்முயற்சியின் விளைவு தான் புகழ்பெற்ற கோலன் வகைப்பாட்டு முறையாகும்.

1931 ல் நூலக அறிவியல் பற்றிய விதிகளை உருவாக்கினார் 1933 கோலன் வகைபடுத்துதல் முறையை செம்மைப்படுத்தினார். ஒரு பொருளின் பல்வேறு கூறுகளை அறிவதும், அந்த வகைக்கு ஓர் எண் இடுவதும் அதனை மற்ற கூறுகளோடு இணைப்பதும் கோலன் வகைப்படுத்தும் முறை ஆகும். இதன் ஒரு பகுதி நூலின் பொருள் பற்றிய அறிமுகத்தை குறிக்கும். இத்துடன் நூலக வகைப்பாட்டில் எந்த வகையை சார்ந்தது என்பதை குறிக்கும்.

பனாரஸ் காசி இந்து பல்கலைக்கழகத்தில் நூலகத்துறை பேராசிரியராக நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். இதற்கிடையில் இந்திய நூலக சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்றார். பெங்களூரில் இந்திய புள்ளியல் துறையின் இயக்குனராக 5 ஆண்டுகள் பணிபுரிந்தார். நிறுவனத்தின் ஆவணங்கள் பதிவு பயிற்சித்துறை ஆய்வு மையம் ஆகியவற்றை 1962 இல் நிறுவி சாதனை படைத்தார். எனினும் நூலக அறிவியல் தொடர்பான அவரது ஆய்வு படைப்புகள் சாதனையின் உச்சம் ஆகும்.

சீர்காழிக்கு பெருமை சேர்த்த அவருக்கு, சீர்காழியில் அவரது பெயரால் ஒரு அரசு நூலகம் வேண்டும். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நீண்ட நாள் கோரிக்கை, ஜனசக்தி பத்திரிகை செய்தி எதிரொலியாக புதிய கட்டிடம் 1 கோடியே 30லட்சம் செலவில் கட்டப்பட்டு, இன்னும் ஓரிரு வாரங்களில் திறக்க உள்ள நிலையில் உள்ளது .

–மா.பிரபாகரன்



அருண் நெடுஞ்செழியன்

**இந்துத்துவ பாசிஸ்ட்கள் இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி ஒன்பது ஆண்டுகள ஆகிவிட்டது.அடுத்தாண்டு நடைபெறப் போகிற நாடாளுமன்றத் தேர்தலில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு எதை வேண்டுமானாலும் செய்வதற்கு தயாராக வேலை செய்து வருகிறார்கள்.**

மத உணர்வு, சம்ஸ்கிருத மொழி போன்ற கலாச்சார அம்சங்களில் அதிக முக்கியத்துவம் கொடுப்பதை கவனிக்கலாம். சிவில் சமூகத்தின் சித்தாந்த கலாச்சார அடித்தளத்தின் மேல் நிரந்தர அரசியல் மேலாண்மையை நிறுவுவது ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் முக்கிய செயல்திட்டம் ஆகும்.

யூதர்கள் மீதான வெறுப்புணர்வை நிரந்தரப் பகையாக ஜெர்மானியர்களிடம் கட்டமைத்து அரசியல் அதிகார செல்வாக்கை நாசிகள் எப்படிப் பெற்றார்களோ, அதுபோலவே இந்தியாவின் இந்து மத மக்களுக்கு எதிராக இஸ்லாமிய, கிறிஸ்தவ மதப் பிரிவினரை நிரந்தரப் பகைவர்களாக கட்டமைப்பதன் வழியே அரசியல் அதிகார அரங்கில் மேலாண்மை செய்வது, நிரந்தர அரசியல் பெரும்பான்மை பெறுவது என்ற மூர்க்கத்தனமான வேட்கை கொண்டவர்கள். அதனால்தான் இஸ்லாமியர்களால், கிருத்துவர்களால் இந்தநாடு ஆபத்தில் உள்ளது உள்ளது என செயற்கையாக ஒரு அச்சத்தை விதைத்து பிரச்சாரம் செய்கிறார்கள்.

மத அடிப்படையில் பழம் பொற்கால அமைப்பையும்,வெகுஜன அரசியல்கட்சியாக பாஜகவையும் பயன்படுத்துகிறார்கள்.இந்த அமைப்புகளைக் கொண்டு எவ்வாறு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுகிறார்கள் என்பதை பார்ப்போம்.

முதலாம் உலகப் போரால் உற்பத்தி சக்திகள் சிதிலமடைந்து, வர்த்தகம் சுருங்கி நெருக்கடி நிலையில் இத்தாலி தத்தளித்தது. முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியின் வழியே நாட்டை ஆள்வதற்கான அதிகார ஆளுமையை இத்தாலிய பூர்ஷ்வா கட்சி இழந்தது.

இந்த வரலாற்று வாய்ப்பைப் பயன்படுத்தியே முசோலினி அரசியல் அரங்கில் முன்னணிக்கு வருகிறார். இத்தாலிய முதலாளித்துவ சக்திகளின் மீட்சிக்கு முசோலினியின் தலைமை தவிர்க்க முடியாத தேவையானது. கலகத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை, கம்யூனிஸ்ட்களை, ஜனநாயக நிறுவனங்களை முசோலினியின் படை வேட்டையாடியது.

இத்தாலியில் தாராளவாத பூர்ஷ்வா கட்சியின் அரசியல் பலவீனமும், சோஷலிச கட்சியின் திரிபுவாதமும் நாசிக்களின் என்ற முழக்கத்தின் மூலமாக பாபர் மசூதி இடிப்புக்கு வழிவகுத்த, அதற்கு பிந்தைய கலவரத்திற்கு வித்திட்ட இந்த நிகழ்வை 17 ஆண்டுகொலம் விசாரித்து அறிக்கை அளித்த லிபரான் கமிஷன், பாபர் மசூதி திட்டமிடாமல் இடிக்கப்பட்ட நிகழ்வல்ல, அது தன்னெழுச்சியாக நிகழ்ந்ததும் அல்ல என்பதை சுட்டிக்காட்டியது.

மதச்சார்பற்ற அரசு, சட்டத்தின் பெயரிலான ஆட்சி என வடிவத்தில் மட்டுமே நீடிக்கிற சுதந்திர குடியரசின், இந்து மத ஆதரவு பெரும்பான்மைவாத ஒடுக்குமுறையின் எதிர்விளைவாக இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கங்கள் உருவாகின. இந்துத்துவ அடிப்படைவாத அரசியலின் நெருக்கடியை இஸ்லாமிய அடிப்படைவாத எதிர் தாக்குதலால் முறியடிக்க முயற்சித்தன.

1947 – 90 கள் வரையிலான தேங்கிய வளர்ச்சிப் போக்குகள், சமுதாய நெருக்கடிகள், அரசியல் நெருக்கடி நிலையைதாக்குபிடிக்கஇயலாமல்உயிர்விட இருந்த இந்திய முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியை, உலகமயம் தனியார்மயம் தாராளமயக் கொள்கைகள் தற்காலிகமாக

# வகுப்புவாதத்தில் தொடங்கி கார்ப்பரேட்டுகளிடம் சங்கமம்!

தேர்தலுக்கு முன்பாக அயோத்தியில் இராமர் கோயில் திறப்பை பிரம்மாண்டமாக நடத்தி தங்களது பொருளாதார தோல்வியை மதவாத அரசியலால் ஈடுகட்ட கடுமையாக முயற்சித்து வருகிறார்கள்.மறுபுறம் பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ஆட்சி செய்கிற எதிர்க்கட்சிகளை அமலாக்கத்துறை மற்றும் ஆளுநர்களின் துணைக் கொண்டு மிரட்டுவதையும் பலவீனப்படுத்துவதையும் முக்கிய திட்டமாக செயல்படுத்தி வருகிறார்கள்.

தேர்தல் நெருங்குகிற இறுதி கட்டத்தில் பாகிஸ்தான், தீவிரவாதம், ராணுவ வீரர்கள் என ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து தேசிய வெறியூட்ட முயல்வர்கள்.இவ்வாறாக தேர்தல் நெருங்க நெருங்க ஆர்.எஸ்.எஸ் பாஜக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வெறிகொண்டு வேலை செய்கிறார்கள். அவர்களது நோக்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவது மட்டுமல்ல.ஆட்சி அதிகாரத்தை கொண்டு தங்களது சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவது ஆட்சி அதிகாரத்தை நிலையானதாக ஆக்குவது குறித்ததாகும்.

இன்னும் இரண்டு ஆண்டு போனால்,ஆர் எஸ் எஸ் அமைப்பு நிறுவப்பட்டு நூற்றாண்டு ஆகப்போகிறது. ஒருவேளை அடுத்தாண்டு பாஜக ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டாலும் ஆர் எஸ் எஸ் அமைப்பு சமூகத்தில் நீடிக்கும்.இந்துத்துவ அரசியலும் தொடரும்.எனவே ஆர் எஸ் எஸ் அமைப்பை சமூகத்தில் இருந்து ஒட்டுமொத்தமாக அகற்றுவதற்கும் நீர்த்துப் போகச் செய்வதற்கும் முதலில் ஆர் எஸ் எஸ் அமைப்பு குறித்தும் அதன் சமூக வேர்கள் குறித்தும் இந்தியாவின் அரசு அதிகாரத்தை எவ்வாறு கைப்பற்றி வெற்றி பெற்றது என்பது குறித்தும் ஆய்வு செய்வது அவசியமாகும்.

இந்திய ஒன்றியம் உருவாகி 75 ஆண்டு காலம் ஆகியும், உற்பத்தி சக்தி வளர்ச்சியிலும், உற்பத்தி உறவு மாற்றத்திலும் மிகவும் பின்தங்கிய சமூகமாக நீடிக்கிற இந்திய சமுதாயத்தின் கிராமப்புற குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தினர் (குறிப்பாக உயர்நிலை, இடைநிலை சாதிப் பிரிவினர்) ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் சக்திகளாக உள்ளனர். தங்களுக்கு கீழ் ஒரு சாதி உள்ளது என்கிற பிரமிட் சாதி அடுக்கிளான சாதிய சமூகத்தில், ஒப்பீட்டளவில் இடைநிலை சாதிகளே அதிக சாதி வெறி கொண்டவர்களாக இருப்பதால் அவர்களையே தங்களது சமூக வேறாக ஆர் எஸ் எஸ் பயன்படுத்திக் கொள்கிறது.

ஒவ்வொரு தேர்தல் பிரச்சாரத்தின் போதும் சரி,அதற்கு முன்பும் சரி, ஆர். எஸ். எஸ்., பாஜகவினர் பொருளாதாரம் வேலைவாய்ப்பு குறித்து வாய் திறக்காமல்



பெருமை பேசுவது, அதீத மதத்தேசியவாதம் குறித்து அதிகம் பேசுவது, நீதிமன்றம், ராணுவம், தனிப்படை இவற்றோடு கட்சியையும் ஆட்சியையும் இணைத்து ஒற்றைக் கட்சி சர்வாதிகாரத்தை நிறுவுவது முதலியனவற்றை நாசிகளிடமிருந்து ஆர்.எஸ்.எஸ் சுவீகரித்துக் கொடண்டது. அதனை பலகட்ட பரிசோதனை முயற்சிகளின் வழியே இந்திய நிலைமைக்கு ஏற்ப, நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது.

முன்னாள் ராணுவத்தினரை தங்களது அமைப்பில் பாசிஸ்ட் இயக்கத்தினர் தீவிரமாக இணைத்துக் கொண்டது போல இந்திய முன்னாள் ராணுவ அதிகாரிகளையும் தங்களது அமைப்பிற்குள் ஈர்த்தனர். அண்மையில் முன்னாள் இந்திய ராணுவ மேஜர் ஜென்ரல் ஆர்.எஸ்.எஸ் உடையணிந்து உலா வந்த செய்தி இதற்கொரு சாட்சியாகும்!

இத்தாலியின் முசோலினி போல, வாஜ்பாயும், நரேந்திர மோடியும் முதலாளிய அரசியல்வாதி போல நாகரிகமாகவும் கண்ணியமாகவும்நடந்துகொண்டுதொழில் அதிபர்களின் ஆதரவையும் நிதியையும் பெற்றனர். மறுபுறம் தங்களது காவி குண்டர் படையால் சமூகத்தில் நிறுவனமயப்பட்ட வகுப்புவாத கலவரங்களை காவல்துறை மற்றும் ராணுவத்தின் ஆதரவுடன் ஊக்குவிக்கின்றனர்.

இந்த செயல்பாடுகளை எல்லாம் கலாச்சார அமைப்பு என்ற போர்வையில் செய்கிறார்கள்.அதேநேரம் அரசியல் தலையீட்டை நேரடியாக செய்யாமல் தங்களது வெகுஜன அமைப்புகள் மூலம் தங்களது திட்டத்தை அமல்படுத்துகிறார்கள்.

தங்களதுதிட்டத்தைஅமல்படுத்துவதற்கு அரை ரகசிய அமைப்பாக ஆர் எஸ் எஸ் எழுச்சிக்கு எப்படி ஆதாரமானதோ அதைப் போலவே ஆளும் இந்திய காங்கிரஸ் கட்சியின் அரசியல் பலவீனத்தை நல்வாய்ப்பாக ஆர்.எஸ். எஸ் பயன்படுத்திக்கொண்டது.

காந்தி படுகொலைக்கு பின்னர் 1948 முதல், நேரு மறைந்த 1962 வரையிலும் காங்கிரசுக்கு எதிராக அரசியல் செல்வாக்கு செலுத்த முடியாத நிலையில் இருந்த ஆர்.எஸ்.எஸ், 1975 ஆம் ஆண்டில் இந்திரா காந்தியின் எமர்ஜென்சி காலத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நிலையை லாவகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

நேருவின் நெருங்கிய நண்பரும் மூத்த காங்கிரஸ் தலைவருமான ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையிலான கூட்டணியின் முக்கிய கூட்டாளியானது ஆர்.எஸ்.எஸ். தன்னை சோசலிசவாதியாக காட்டிக்கொண்ட ஜெயபிரகாஷ் நாராயணனோ காங்கிரசை விட கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒழிய வேண்டும் என்ற கண்ணோட்டம் கொண்டவர். இதனால் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு இந்திரா காந்திக்கு எதிரான போராட்டத்தில் முக்கிய கூட்டாளியானது.

'முழுமைப் புரட்சி' என்ற முழக்கத்தின் கீழ் இந்திரா காங்கிரசின் எமர்ஜென்சிக்கு எதிரான இயக்கத்தில் ஆர்.எஸ்.எஸ் தீவிரமாக செயல்பட்டது. ஆயிரக்கணக்கான இளைஞர்களை மாணவர்களை ஆளும்கட்சிக்கு எதிராக திரட்டுவதற்கு ஜனதா கட்சி வேலை செய்தது

எமர்ஜென்சிக்கு பிறகு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜனதா கூட்டணி வெற்றி பெற்று மொரார்ஜிதேசாய் பிரதமரானார். பின்பு கூட்டணி கட்சிகள் ஆதரவை விலக்கிக் கொண்டதால் சரண் சிங் பிரதமரானார். ஆர்.எஸ்.எஸ் தலைவர்களான வாஜ் பாய், அத்வானி ஆகியோர் ஒன்றிய ஜனதா அரசாங்கத்தின் காபினெட் அமைச்சரவையில் இடம்பெற்றனர்.

1989 இறுதியில் பொருளாதார நெருக்கடிகள் மென்மேலும் அரசியல் நெருக்கடியாக வெடிக்கத் தொடங்கின. ஆர்.எஸ்.எஸ் செயல்களத்திற்கு பாதை திறக்கிறது.. வகுப்புவாத கலவரங்களை தீவிரமாக்குகிறது.

1989 – 92 இடையிலான கலவரங்கள், அத்வானியின் ரத யாத்திரை போன்றவை பாபர் மசூதி இடிப்புக்கு இட்டுச் சென்றன. மண்டல் கமிஷன் அறிக்கையை நடைமுறைப்படுத்த முயன்ற அன்றைய வி.பி.சிங் தலைமையிலான ஒன்றிய அரசைக் கவிழ்ப்பதற்கும், உத்தரப்பிரதேச ஆட்சியை பிடிப்பதற்கும் இந்த வன்முறையை தனது பிற்போக்கு நலன்களுக்காக பயன்படுத்தியது பாஜக.

இன்னும்ஒரு இடிதான், மசூதியைதாக்கு காத்தது. சுமார் இருபது ஆண்டுகளாக செல்வாக்கு இழந்திருந்த காங்கிரஸ் தனது அரசியல் மறுவருகையை நரசிம்மராவ் சீர்திருத்தம் மூலமாக நிகழ்த்தியது. 90 களுக்குப் பிறகான சூழலில் தாராளமய உலகமயக் கொள்கையை பிரதிநிதித்துவப் படுத்தாமல் இந்திய ஆளும்கட்சியாக முடியாது என்ற உண்மையை பாஜக விரைவாகவே தெரிந்துகொண்டது. வகுப்புவாத கலவரத்துடன் வளர்ச்சி முழக்கத்தை இணைத்தது. மீண்டும் கூட்டணி கட்சிகளின் தயவிலான சகாப்தம் தொடங்கியது.

கம்யூனிஸ்ட் கட்சிகளைத் தவிர மற்ற அனைத்துக் கட்சிகளும் ஆர்.எஸ். எஸ் பாஜகவின் கூட்டணிக்கு சென்று வந்தன. இந்திய முதலாளிய வர்க்கம் பாஜகவை தனது பிரதிநியாக ஏற்கத் தொடங்கியது. 1998 ஆம் ஆண்டில் கூட்டணி கட்சிகளின் ஆதரவில் வாஜ் பாய் தலைமையிலான பாஜக கூட்டணி அரசு, ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்தது. பிறகு நடைபெற்ற 2004 ஆண்டு தேர்தலில் மேற்கொண்ட இந்திய ஒளிர்கிறது பரப்புரை பாஜகவிற்கு கைகொடுக்கவில்லை. மீண்டும் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வருகிறது.

2004–2014 வரையிலான ஒரு தசாப்த காலமாக ஆட்சி பொறுப்பிலிருந்த காங்கிரஸ் 2014 ஆம் ஆண்டு தேர்தலில், அதன் நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் இல்லாத அளவுக்கு 206 இடங்களிலிருந்து வெறும் 44 நாடாளுமன்ற இடங்களைப் பெற்று தோற்றது.

2014 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய கார்ப்பரேட்டுகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, நரேந்திர மோடியை ஒரே அரசியல் தலைவராகப் பிரதிநிதித்துவம் செய்தனர். இதில் குஜராத் மாநில கார்ப்பரேட் இயக்குநர்கள் லாபி முதன்மையானது. சுமார் பதினைந்து ஆண்டுகாலமாக குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி, சூறையாடும் முதலாளித்துவ சக்திகளுக்கு மிகுந்த ஆதரவாக இருந்தவர். மற்ற மாநிலங்களை விட குஜராத் முதலாளித்துவ சக்திகளுக்கு நிதி உதவியோடு பல்வேறு உதவிகளை மேற்கொண்டவர்.

இதற்கு பிரதிபலனாக கார்ப்பரேட் ஊடகத்தின் வெறித்தனமான பரப்புரை உத்தியின் துணையுடன், அமெரிக்க அதிபர் தேர்தல் செலவை விஞ்சுகிற வகையில் தேர்தல் விளம்பர செலவு செய்தும் மோடி பிம்ப அலை உருவாக்கப்பட்டது. குஜராத் மாநிலத்தை முதலாளித்துவ சக்திகளுக்கு கொள்ளையடிக்க கொடுத்த அனுபவத்தால் இந்திய முதலாளிகளின் மனங்கவர்ந்த அரசியல் தலைவராக மோடி பரிணமித்தார்.

இது தற்போதுவரை தொடர்கிறது!

தொடர்புக்கு : 98423 91963

## வேறு கட்சி ஆளும் மாநிலங்களை தண்டிக்கிற ஒன்றிய அரசு

### வீணாகும் தானியங்கள்

ஒன்றிய அரசு 'திறந்த சந்தை விற்பனை திட்டத்தின்' மூலம் மாநில அரசுகளுக்கு அரிசி விற்பதை, கடந்த ஜூன் மாதத்தோடு நிறுத்திவிட்டது. ஒரு கிலோ அரிசி 38 ரூபாய் என்ற விலைக்கு, தமது மாநில மக்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்குவதற்கு, மாநில அரசுகள் இந்தத் திட்டத்திலிருந்து அரிசியைப் பெற்று வந்தன. தமிழ்நாட்டில் விலை இல்லாமல் அரிசி தரப்படுகிறது.

வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக, பொதுச் சந்தையில் இணைய வழி ஏலம் (இ ஆக்சன்) விடுவதாகவும், மாநில அரசுகளுக்கு இனிமேல் நேரடி விற்பனை இல்லை எனவும் இந்திய அரசு அறிவித்தது.

ஜூலை மாதத்தில் தனியாருக்கு ஏலம் விடும் முறை துவங்கியது. இதன் மூலம் 25 லட்சம் டன் அரிசியை விற்பது என்பது இலக்கு. ஆனால் இதுவரை ஒரு லட்சம் தான் விற்பனையாகியுள்ளது.

இந்தப் பருவ காலத்தில், இந்திய உணவுக் கழகமும், மாநில அளவிலான நுகர்வோர் வாணிபக் கழகங்களும் 170 லட்சம் டன் அரிசியை கொள்முதல் செய்துள்ளன. ஒடிசா, ஜார்கண்ட் மாநிலங்களில் இருந்து இன்னும் 500 லட்சம் டன் அரிசி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ராபி பருவத்தில் மேலும் 50 முதல் 60 லட்சம் டன் வரை கொள்முதல் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அக்டோபர் 1ல் இந்திய உணவுக் கழகத்திடம் உள்ள கையிருப்பு அரிசி 221 லட்சம் டன்கள் ஆகும். இது தேவையை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

ஏற்கனவே இந்திய உணவுக் கழகத்தின் பாதுகாப்பில்லாத கிடங்குகளில் பல்லாயிரக்கணக்கான டன் அரிசியும் கோதுமையும் வீணாகியது. அழுகிய தானியங்களை கழுதைகளும், நாய்களும், பன்றிகளும் உண்டு வந்தன. அதனால் தான் மாநில அரசுகளுக்கு குறைந்த விலையில் அரிசி கொடுக்கும் திட்டம் துவக்கப்பட்டது.

உலகத்தின் 15 கடும்பட்டினி நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. உலகத்திலேயே மிக அதிகமான ஏழைகள் வசிக்கும் நாடு நமது இந்தியா தான். சாதாரண மக்கள் மத்தியில் பட்டினிச் சாவு ஏற்படாமல் தடுப்பதற்கு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாநில அரசுகள் வழங்கிய அரிசி பெரும் காரணியாக இருந்து வந்தது.

இப்போது அதை நிறுத்தியதின் விளைவாக மக்களுக்கு கிடைக்க வேண்டிய அரிசி, அழுகி நாசமாகி விலங்குகள் கூட சாப்பிட முடியாத நிலைக்கு கொண்டு சேர்க்கப்படுகிறது.

சேமிப்பில் உள்ள அரிசியை, மிக விரைவில் குறைக்க வேண்டும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அடுத்த ஆண்டு தேர்தல்கள் வருவதால், அதிகமான அரிசியை ஏழை மக்களுக்கு வழங்குகிற வாய்ப்பு அரசுக்கு வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

தமிழ்நாடு போன்ற பாஜக ஆளாத மாநிலங்களில், மக்களுக்கு வழங்கப்படும் அரிசி வீணானாலும் பரவாயில்லை; மக்களுக்கு போய் சேரக்கூடாது; அதன் மூலம் அந்த மாநில அரசுகளுக்கு நல்ல பெயர் வந்துவிடக் கூடாது என்று நினைக்கிறது மோடியின் அரசாங்கம்.

இந்த நயவஞ்சகத்திற்கு, நாட்டு மக்கள் பதில் தருவார்கள்.

# உச்சத்தில் சாதனை! உ



இளசை கணேசன்

**13ஆவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடந்து முடிந்திருக்கிறது. இங்கிலாந்து நாட்டின் காலனி நாடுகளான வெறும் 10 நாடுகள் மட்டும் பங்கேற்கும் இந்தப் போட்டி உலகப் போட்டி என்று அழைக்கப்படுகிறது.**

இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் என்று பெரிதும் நம்பப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டது.

இறுதிப் போட்டிக்கு முன்னர் வரை நடைபெற்ற 9. லீக் போட்டிகளிலும் 10 வது அரை இறுதிப் போட்டியிலும் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் தொடர் வெற்றிகளை சாதித்தது! இந்தப் போட்டிகளில் இந்திய வீரர்களின் விளையாட்டு பிரமிக்கத்தக்கதாக இருந்தது.

பேட்டிங்கில் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் இந்தியா இந்த முறை பவுலிங்கிலும் சிறந்து விளங்கியது.

இத்தோடு இந்திய வீரர்கள் பல்வேறு சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளனர். இதுவே இந்திய வெற்றி பெரிதும் நம்பப்பட்டதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

ஆட்சியாளர்களும், சங்கிகளும் இதை மேலும் ஊதிப் பெருக்கிவிட்டார்கள்! இந்திய வெற்றி குறித்து நிதானமாக பேசப்படவில்லை.

ஆஸ்திரேலியாவை இந்திய அணி ஊதித் தள்ளிவிடும்! பந்தாடிவிடும்! அடித்து நொறுக்கி விடும்! ஆஸ்திரேலியா அணி அலறுகிறது! அந்த அணி நம்பிக்கை இழந்து விட்டது! என்ற அளவுக்கு பிரச்சாரம் மேலோங்கி இருந்தது.

அளவுக்கு மீறிய அதீத நம்பிக்கை தடுமாறித் தகர்ந்தது. இந்திய அணி தோல்வியை தழுவியது! அணி வீரர்களை மட்டுமல்ல ஆட்சியாளர்களையும் கோடிக்கணக்கான கிரிக்கெட் ரசிகர்களையும் சோகம் கவ்விக்கொண்டது.

வெற்றி களிப்பில் நிதானம் தவறிய போதும் தோல்வியின் போது நிதானம் நிலைநாட்டப்பட்டது. ஆஸ்திரேலியா வீரர்கள் சொன்னது போல் அமைதியை நிலைநாட்டி விட்டார்கள்!

ஒருவேளை இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுடன் விளையாடி இந்தியா தோற்று இருந்தால் நிலமை என்னவாயிருக்கும்?

10 போட்டிகளில் தொடர் வெற்றியும் பல்வேறு சாதனைகளையும் குவித்த இந்திய அணி வீரர்களை நாமும் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த இந்திய வீரர்களுக்கு நாமும் ஆறுதல் தெரிவிக்கிறோம்.

விளையாட்டு போட்டிகளில் எதுவும் நடக்கலாம்! இதுதான் நடக்கும் என்று அறுதியிட்டு கூற முடியாது. கடந்த உலகக் கோப்பை போட்டியில் வென்ற இங்கிலாந்து அணி இந்த முறை லீக் போட்டிகளில் கூட தாக்கு பிடிக்காமல் ஆறாவது இடத்தையே பிடிக்க நேர்ந்தது! இது யாரும் எதிர்பார்க்காத ஒன்று?

இந்திய வீரர்களே சாதனை படைத்தார்கள் என்பது போன்று காட்டப்படுகிறது. ஆனால் உண்மையில் அப்படியல்ல. ஆஸ்திரேலியா மற்றும் தென்னாப்பிரிக்க வீரர்களும் சாதனை படைத்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| அதிக ரன்கள் விராட் கோலி | – | 765 |
| அதிக அரை சதம் விராட் கோலி | – | 6 |
| அதிக பவுன்டரிகள் விராட் கோலி | – | 68 |
| தொடர் நாயகன் விராட்கோலி | | |
| அதிக சிக்ஸர்கள் ரோஹித் சர்மா | – | 31 |
| அதிக விக்கெட்டுக்ள் முகமது சமி | – | 24 |
| சிறந்த பவுலிங் முகமது சமி | – | 7/57 |
| அதிக டாட் பால் மும்ரா | – | 372 |
| அதிக மெய்டன் ஓவர் மும்ரா | – | 9 |
| வெற்றி சதவீத புள்ளிகள். இந்தியா | – | 90.9 |

இதைத் தவிர இந்திய வீரர் விராட் கோலி மூன்று சதங்களை அடித்ததுடன் ஒரு நாள் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் அடித்த 49 சதம் என்பதை 50 சதங்கள் அடித்ததன் மூலம் முறியடித்து உள்ளார்.

இவ்வாறு இந்திய வீரர்களின் சாதனை பாராட்டும் வகையில் அமைந்தது.

அதிக சதம் குவின்டன் டிகாக் (தென் ஆப்பிரிக்கா) 4

இரட்டை சதம் அடித்தவர் மேக்ஸ்வெல் (ஆஸ்திரேலியா) 201

இறுதிப் போட்டியில் சதம் அடித்தவர் டிராவிஸ் ஹெட் (ஆஸ்திரேலியா) ரன்கள் 137.

6 வது முறையாக உலக கோப்பையை வென்ற அணி ஆஸ்திரேலியா.

என்றவாறும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

சாதனை பட்டியலில் முதலிடம் வகித்த இந்திய அணி இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தது ஏன்?

இந்திய அணியின் தோல்விக்கு பேட்டிங், பவுலிங், மற்றும் பில்டிங் ஆகிய மூன்றும் காரணமாக அமைந்தது ஏன்?

காரணங்களை நான்கு வகையாக பிரிக்கலாம்.

1. இந்திய அணி சம்பந்தப்பட்ட காரணங்கள்.
2. மோடி அரசு தலையீடுகள்
3. ஆர் எஸ் எஸ் மற்றும் சங்கிகளின் சண்டித்தனங்கள்
4. பிரத்யேக அடிப்படை காரணங்கள்.

### அணி குறித்த காரணங்கள்:

◆ ஒரே மாதிரியாக அமைக்கப்பட்ட வியூகம்.

◆ சொந்த மண்ணில் ஆடுகளம் பற்றிய மதிப்பீட்டில் குறைபாடு.

◆ எதிர் அணியின் திறமை பற்றி குறைவான மதிப்பீடு.

◆ ஆடுகளம் பேட்டிங்கிற்கு சாதகமாக இல்லாத போது சுப்மன் கில், ரோகித் சர்மா மற்றும் சிரேஸ் ஐயர் ஆகிய மூவரும் அடித்தாடத் தொடங்கி அவுட் ஆனது.

◆ ஆஸ்திரேலியா அணியில் 9 பேர் வரை பேட்டிங் செய்கிறார்கள். ஆனால் இந்திய அணியில் 7 பேர் மட்டுமே பேட்டிங் செய்ய முடிகிறது.

◆ ஆஸ்திரேலியா அணியில் ஆல் ரவுண்டராக பலர் இருக்கிறார்கள். ஆனால் இந்திய அணியில் ரவீந்திர ஜடேஜா மட்டுமே இருக்கிறார்.

◆ இந்திய அணியில் 50 ஓவர்கள் வீசுவதற்கு ஐந்து பவுலர்கள் மட்டுமே உள்ளனர் 6 வது பவுலர் இல்லை.

◆ ஆஸ்திரேலியா அணிக்கு எதிராகவும், இடது கை பேட்ஸ்மேன்களுக்கு எதிராகவும் சிறப்பாக பந்து வீசக்கூடிய அஸ்வின் போட்டியில் இறக்கப்பட்டிருக்க வேண்டும். விராட் கோலி உள்ளிட்டோ இதை வலியுறுத்தியும் அணியின் கேப்டன் ரோஹித் சர்மா இதை செய்ய தவறிவிட்டார்.

◆ கூட்டு ஆலோசனை, கூட்டு முடிவு, மற்றும் கூட்டுச் செயல்பாடு என்பது இறுதிப் போட்டியின் போது இல்லை.




### மோடி அரசு தலையீடுகள்

உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகனும் இந்திய கிரிக்கெட் வாரியத்தின் தலைவருமான ஜெய்ஷா முழுமையாக களம் இறக்கப்பட்டார்.

◆ கிரிக்கெட் விளையாட்டு வியாபாரம், அரசியல் மற்றும் மதவாத தளமாக மாற்றப்பட்டுவிட்டது.

◆ 12,50,507 பேர்கள் பார்வையாளர்களாக விளையாட்டு மைதானத்திற்கு ஈர்க்கப்பட்டனர்.

◆ விளம்பர ஒளிபரப்புக்கு 10 நொடிக்கு 11 லட்சம் முதல் 15 லட்சம் வரை! அதுவும் இந்தியா பாகிஸ்தான் மோதும் போட்டி மற்றும் இறுதிப் போட்டி ஆகியவற்றுக்கு 10 நொடிக்கு 35 முதல் 45 லட்சம் வரை என்று நிர்ணயம் செய்யப்பட்டது.

◆ அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானம் முதல் தர மைதானமா? அல்லது இரண்டாம் தர மைதானமா? இரண்டும் அல்ல! மூன்றாம் தர மைதானத்தை உலகக்கோப்பையின் இறுதிப் போட்டிக்கு தேர்வு செய்து திணிக்கப்பட்டது.

இறுதிப் போட்டி துவங்கும் முன்பு குடியரசு தினம், சுதந்திர தினம் கொண்டாடுவதைப் போன்று இந்திய விமானப் படையின் 'சூர்யாகிரண்' குழு விமானங்கள் ஸ்டேடியத்தின் மீது பறந்து போர்க்காலம் போன்று சாகசம் செய்தது. இது மோடி அரசின் திட்டமிட்ட மூக்கு நுழைப்பு..

◆ ஒரு லட்சத்து 32 ஆயிரம் டிக்கெட்டுகளில் 30000 டிக்கட்டுகள் மட்டும் முறையாக விற்பனை செய்துவிட்டு மீதமுள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட டிக்கெட்டுகளை சங்கிகள் மூலம் விற்பதற்கு கடை திறந்து விடப்பட்டது.

◆ உலக கோப்பையின் முதல் நாள் போட்டியில் கோலாகல துவக்க விழா நடத்தப்படுவது வழக்கம். ஆனால் இந்தியாவில் அப்படி நடத்தப்படவில்லை.

◆ 1983 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் உலகக் கோப்பையை இந்தியாவுக்கு வென்று கொடுத்த முன்னாள் கிரிக்கெட் கேப்டன்கள் கபில் தேவ் மற்றும் மகேந்திர சிங் டோனி ஆகியோர் இறுதிப் போட்டிக்கு அழைக்கப்படவில்லை.

◆ இவர்கள் இருவரும் மோடியையும் அவரின் இந்துத்துவ

# உள்ளத்தில் வேதனை!

அரசியலையும் ஆதரிப்பவர்கள் அல்ல என்பதே இவர்கள் அழைக்கப்படாததற்கு காரணம்.

◆ உத்தரகாண்ட் சுரங்க விபத்தில் சிக்கிய 40 தொழிலாளர்களின் உயிர்கள் பற்றி கவலைப்படாமல் இந்திய பிரதமரும், உள்துறை அமைச்சரும் கிரிக்கெட் கேலரியில் அமர்ந்து விளையாட்டை பார்த்தனர்.

◆ மைதானத்தில் இருக்கக்கூடிய பெரிய திரையில் பிரதமர் கையசைப்பது போன்ற படம் காட்டப்பட்டது! அதைக் கண்டு ரசிகர்கள் யாரும் ரசிக்கவில்லை என்பது அவருக்கே அதிர்ச்சியாக இருந்திருக்கும்!

◆ வெற்றிக் கோப்பையை ஆஸ்திரேலியா அணி தலைவரிடம் வழங்கிய நிகழ்ச்சியில் பிரதமர் மோடி நடந்து கொண்ட விதம் முகம் சுளிக்க வைத்து. இது உலக அரங்கில் இந்தியாவுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியது.

மோடி அரசு உலகக்கோப்பை கிரிக்கெட்டில் முழுமையாக தலையிட்டதின் நோக்கம் உலகக்கோப்பை கிரிக்கெட் இந்திய வெற்றியை வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில்

பற்றி எல்லாம் சங்கிகளுக்கு எந்தக் கவலையும் இல்லை.

◆ ஜெய் ஸ்ரீ ராம் என்று கூப்பாடு போட்ட சங்கி கூட்டத்தின் வாய்கள் இறுதிப் போட்டியில் கட்டப்பட்டு விட்டன.

◆ இந்த உலக கோப்பை போட்டி வியாபார ரீதியில் வென்றுள்ளது. ஆனால் அரசியல் ரீதியில், மதவாத ரீதியில் மண்ண கல்வியுள்ளது.

### அடிப்படை காரணங்கள்:

மேலே குறிப்பிட்ட மூன்று வகையான காரணங்களும், தோல்விக்கு காரணங்கள் என்றாலும் இவைகள் தவிர்த்து நான்காவதாக ஒரு முக்கிய காரணமும் இருக்கிறது.

1928ல் இந்திய கிரிக்கெட் வாரியம் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை பிராமணர்கள் ஆதிக்கத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்திய வீரர்களை தேர்வு செய்வதில் இந்த ஆதிக்கத்தின் தலையீடு இருக்கிறது. அணியை வழி நடத்தும் கேப்டன்கள் தேர்விலும் இந்த தலையீடு இருக்கிறது.

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் இதுவரை இரண்டு முறை உலக




ஆதாயமாக பயன்படுத்துவது என்பதே காரணம்.

### சங்கிகளின் சண்டித்தனம்:

◆ உலகக் கோப்பை கிரிக்கெட் என்பதை மதிக்காமல் சங்கிகளின் நிகழ்வுகள் போல மாற்றியது.

◆ எதைப் பற்றியும் கவலைப்படாமல் எங்கள் விருப்பப்படிதான் உலகக் கோப்பை கிரிக்கெட்டை நடத்துவோம் என்ற அதிகார தோரணையில் நடத்தினார்கள்.

◆ பாஜக ஆர் எஸ் எஸ் அமைப்புகளின் ஐடி விங்குகளும், சங்கிகளும் இரட்டை வியூகமாக களமிறக்கப்பட்டன.

◆ கங்கை நதி தீரங்களிலும், முக்கிய புனிதஸ்தலங்களிலும் இந்தியாவின் வெற்றிக்காக பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. சில இடங்களில் யாகங்கள் வளர்க்கப்பட்டன.

◆ இறுதிப் போட்டிக்கு சங்கிகளையும் திரட்ட வேண்டும் டிக்கெட் விற்பனையில் கொள்ளை அடிக்கவும் வேண்டும் என்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட நுழைவு டிக்கெட்டுகள் கள்ள விலைக்கு விற்பனை செய்யப்பட்டன. 2 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள டிக்கெட் விலை 40,000 முதல் 2 லட்சம் வரை விற்று கல்லா கட்டியது சங்கிக் கூட்டம்.

◆ இதே அகமதாபாத் ஸ்டேடியத்தில் பாகிஸ்தானுடன் இந்தியா மோதிய போட்டியில் 'ஜெய்ஸ்ரீராம்' என்று கூப்பாடு போட்டு உலக அளவில் இந்தியாவுக்கு தலைகுனிவை ஏற்படுத்தியது. இதைப்

கிரிக்கெட் கோப்பை வெல்லப்பட்டுள்ளது. இந்த இரண்டு முறையும் இந்திய அணிக்கு தலைமை தாங்கியவர்கள் பிராமணர் அல்லாதவர்கள் என்பது கவனிக்கத்தக்கது.

இறுதிப் போட்டி என்று வரும்போது அதை எதிர் கொள்கின்ற மன வலிமை, தன்னம்பிக்கை முக்கியமானவையாகும். ஒரு வகையான பதற்றம் பற்றிக் கொள்ளும்.

இந்த உலகக் கோப்பை போட்டியில் தொடர் வெற்றி என்பதால் மெத்தனமும் பாஜக மற்றும் சங்கிகளால் ஊதிப் பெருக்கப்பட்ட வெற்றி என்ற வெறி என்பதும் மிகுந்த அழுத்தத்தை கொடுத்து விட்டது. இந்த அழுத்தம் ஏற்கனவே இருக்கும் பதற்றத்தை அதிகரிக்க செய்துவிட்டது.

இந்திய அணியின் தோல்விக்கு இதுவே பிரதான காரணம்!

இந்திய அணியின் வீரர்களை மாற்றினால் மட்டும் போதாது இந்திய கிரிக்கெட் வாரியத்தையே மத்திய அமைக்க வேண்டும்.

தகுதி, திறமை இருந்தும், சாதி காரணமாக வீரர்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என நீண்ட கால நியாயமான சந்தேகம் நீக்கப்படும் வகையில் இந்திய கிரிக்கெட் வாரியமும் கிரிக்கெட் வீரர்களும் தேர்வு செய்யப்பட வேண்டும்.

வேறு வகையான குறுக்கு வழிகள் எதுவும் இல்லை!

தொடர்புக்கு: 8220468816

# உயிர்களை மீட்க இன்னும் எத்தனை நாட்கள் ஆகும்?

◆ உத்தரகண்ட் சுரங்க விபத்தில் அசட்டையில் ஒன்றிய அரசு!
◆ பரிதவிக்கும் 40 தொழிலாளர்களின் குடும்பங்கள்!



உத்தரகண்ட் சுரங்கப் பாதை விபத்தில் சிக்கியுள்ள 40 தொழி லாளர்களை மீட்கும் விவகாரத்தில் ஒன்றிய அரசு உறுதியான பதில் அளிக்காமல் குழப்பி வருவதால், 40 தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் பரிதவித்து வருகின்றனர்.

உத்தரகண்ட் மாநிலத்தின் சார்தாம் நெடுஞ்சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரகாசி யமுனோத்ரியை இணைக்கும் வகையில் சில்க்யாரா வளைவு பர்காட் இடையே 4.5 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த சுரங்க பாதையில் நவம்பர் 12 அன்று அதிகாலை 4 மணி அள வில் 60 மீட்டர் தொலைவு சுரங்கப் பாதை யில் மண் சரிந்தது. இருபுறமும் மண் மூடியதால் சுரங்கப் பாதைக்குள் 40 தொழிலாளர்கள் சிக்கி கொண்ட னர். சுரங்கப்பாதையில் 40 தொழி லாளர்கள் 12வது நாளாக சிக்கியுள்ள நிலையில், தொழிலாளர்களுக்கு உடல் மற்றும் மனநிலை குறித்த அச்சம் அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்குச் சென்ற ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்காரி மீட்பு பணி நடவடிக்கை களை ஆய்வு செய்தார். அதன்பின் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், "ஆர்ஜர் இயந்திரம் சரியாக செயல்பட்டால் சுரங்கத்துக்குள் சிக்கியிருக்கும் தொழிலாளர்கள் விரைவில் மீட்கப்படுவார்கள். உள்ளே இருக்கும் தொழிலாளர்கள் உயிருடனும், ஆரோக்கியத்துடனும் இருப்பதை உறுதி செய்வதில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சிறப்பு இயந்திரங்களைக் கொண்டு வருவதற்காக பிஆர்ஓ (Border Roads Organization) மூலமாக புதிய சாலைகள் போடப்படுகின்றன.

பல்வேறு இயந்திரங்கள் இங்கு வந்துள்ளன. தற்போது இரண்டு ஆர்ஜர் இயந்திரங்கள் துளையிடும் பணி களைச் செய்து வருகின்றன" என்று தெரிவித்தார்.

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்காரி 23 நாட்களில் மீட்கப்படுவார்கள் எனக்கூறியுள்ள நிலையில், பிரதமர் அலுவலக முன்னாள் ஆலோசகர் பாஸ்கர் குல்பே, "இங்கு வேலை செய்யும் பல்வேறு நிறுவனங்களின் கூட்டு முயற்சியால் உள்ளே சிக்கி யிருக்கும் தொழிலாளர்கள் இன்னும் நான்கு ஐந்து நாட்களில் மீட்கப்பட லாம். கடவுளின் கருணை இருந்தால் அது இன்னும் சீக்கிரமாக முடியும்" என்று தெரிவித்துள்ளார். நிதின் கட்காரி, பாஸ்கர் குல்பே ஆகியோரின் இருவேறு கருத்து களால் சுரங்கத்தில் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களும், அவர்களது குடும்பங்களும் பரிதவித்து வருகின்ற னர். ஏற்கனவே 4 நாட்களுக்கு முன் மீட்பு பணி மந்தமாக நடைபெறுவ தாகவும், புதிய திட்டம் இல்லாமல் மீட்புப்பணி நடைபெறுவதாகவும் கூறி சுரங்கத்திற்கு வெளியே தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் போராட்டம் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது உயிருடன் இருக்கிறார்கள் என்பதால் பெருமூச்சு விட முடிகிறது. ஆயினும் எத்தனை பேர் உயிருடன் உள்ளனர் என்பது தெரியவில்லை மீட்பு எப்போது முடியும்?

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் எகூத் பாரக் அளித்த நேர்காணல் இதனை உறுதி செய்துள்ளது. அந்த நேர்காணலில், "அல் ஷிஃபாவில் உள்ள பதுங்கு குழி இஸ்ரேலிய பொறியாளர்களால் கட்டப்பட்டது" என்று எகூத் பாரக் கூறியுள்ளார். "இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் அந்தப் பகுதி இருந்த போது பதுங்கு குழிகளை உருவாக்க உதவினோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அல் ஷிஃபா மருத்துவமனைக்கு தேவையான எரிபொருள் உள்ளிட்ட அனைத்து உதவிகளும் வழங்கப்படுவதாகவும், மருத்துவமனைகள் மீது ஹமாஸ் அமைப்பினர்தான் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார். மருத்துவமனைகளை தாங்கள் குறிவைக்கவில்லை என்றும் நெதன்யாகு அளித்த விளக்கம் தவறானதாகும்.

அங்கு நடந்துள்ள நிகழ்வுகள் பிரதமர் நெதன்யாகுவும் இஸ்ரேல் ராணுவமும் கூறி வருவது பொய்கள் தான் என்பதை உறுதி செய்துள்ளன. அல்ஷிஃபா மருத்துவமனைக்குள் பதுங்கு குழிகள் இருந்ததாகவும் ஹமாஸ் அங்கிருந்து செயல்பட்டதாகவும் வெளியான செய்திகள் ஆதாரமற்றவை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளன.

காசா மீதான தாக்குதல் பாலஸ்தீன மக்களின் கட்டமைப்பை அழித்து, அவர்களை அகதிகளாக்கும் நோக்கம்



கொண்ட, இஸ்ரேலின் இனப்படுகொலைப் போராகும். இதனை நியாயப்படுத்தி இஸ்ரேல், அமெரிக்க அரசுகளும், அவற்றுக்கு சார்பான மேற்குலக ஊடகங்களும் கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றன. இவற்றை மீறி மக்கள் போராட்டங்கள் தீவிரமடைந்தால்தான் இனப்படுகொலை போர் முடிவுக்கு வரும்.

தொடர்புக்கு: 9500001224

# செய்யாறு விவசாயிகள் மீதான வழக்குகளை திரும்பப் பெறுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதி மேல்மா உள்ளிட்ட சுற்று வட்டார விவசாயிகள் அரசின் நில எடுப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடி வருகின்றனர்.

கடந்த ஜூலை மாதம் இரண்டாம் தேதி அரசு நில எடுப்பு நடவடிக்கையை கைவிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து விவசாயிகள் காத்திருப்பு போராட்டம் தொடங்கியுள்ளனர். அந்தப் போராட்டம் அமைதியாக நீடித்து வந்த நிலையில் தொடர்புடைய அதிகாரிகள், அரசுப் பிரதிநிதிகள், விவசாயிகள் உணர்வுகளை உள்வாங்கி பிரச்சினைக்கு தீர்வு காண தவறியதால் போராட்டம் அடுத்த கட்டம் நோக்கி தீவிரமானது.

தீவிரமான போராட்டத்தை காவல்துறை மூலம் ஒடுக்கி விடலாம் என்ற முறையில் போராடிய விவசாயிகள் மீது கடுமையான சட்டப் பிரிவுகளில் 11க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்து, 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து, சிறையில் இருந்த ஏழு விவசாயிகள் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, அதற்கான உத்தரவுகளை சிறையில் இருந்தவர்களிடம் வழங்கிய செய்தி, போராடி வந்த விவசாயிகளை ஆத்திரமுட்டியது. போராட்டத்தை மேலும் விரிவான பகுதிக்கு நெட்டித் தள்ளியது.

இந்தச் சூழலில் சிறையில் இருந்து வரும் விவசாயிகளின் குடும்பத்தினர் முறையிட்டனர் என்ற பெயரில் அரசு கடுமையான நிபந்தனைகள் விதித்து ஆறு விவசாயிகள் மீது குண்டர் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அதே சமயம், போராட்டத்தை ஒருங்கிணைத்து, வழிநடத்தி வரும் அருள் மீது போடப்பட்ட குண்டர் சட்டம் தொடர்கிறது. இது தவிர விவசாயிகள் மீதான வழக்குகளும் தொடர்கின்றன. அரசின் நடவடிக்கை செய்யாறு பகுதியில் அமைதி திரும்ப உதவவில்லை என்பதை அரசு கவனத்துக்கு தெரிவித்து, விவசாயிகள் மீதான மேல்மா சிப்காட் நில எடுப்பு எதிர்ப்புப் போராட்டம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற்று, சிறையில் உள்ள அனைத்து விவசாயிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் எனவும், நில எடுப்பு நடவடிக்கை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு, விவசாயிகளின் பிரதிநிதிகளிடம் அரசு பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண வேண்டும் எனவும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

### கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர்

# சங்கரய்யா மறைவுக்கு தமிழ்நாடு முழுவதும் இரங்கல் கூட்டங்கள்

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர் சங்கரய்யா மறைவுக்கு இரங்கல் கூட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றன

**திண்டுக்கல்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ கட்சியின் முதுபெரும் தலைவர் சங்கரய்யா அவர்களுக்கு அஞ்சலி கூட்டம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிபிஜஎம் மாவட்டச்செயலாளர் சச்சிதானந்தம் தலைமை தாங்கினார். தீக்கதிர் முன்னாள் ஆசிரியர் சுப அகத்தியலிங்கம், திராவிடர் கழகத்தின் ஆனந்தன், அ.இ.அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அன்பரசு, இந்தியகம்யூனிஸ்ட்கட்சி மாவட்டச்செயலாளர் ஏ.பி.மணிகண்டன், திண்டுக்கல் மேயர் இளமதிஜோதிபிரகாஷ், சிபிஜ நகரச்செயலாளர் ராஜாங்கம், சிபிஜ மாவட்ட செயற்குழு உறுப்பினர் கணேசன், சிபிஜ ஒன்றியச் செயலாளர்கள் சக்தி செல்வராஜ், மணிவேல், ஏஜடியுசி மாவட்ட தலைவர் பாலன் உட்பட200க்கும் மேற்பட்டோர் அஞ்சலி செலுத்தினார்கள்.



**மணப்பாறை:** என்.சங்கரய்யா மறைவுக்கு அஞ்சலி கூட்டம் மணப்பாறை, திருவெறும்பூர், துறையூர், உப்புலியபுரம் ஆகிய பகுதிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செவ்வஞ்சலி செலுத்தினர்

மணப்பாறை கோவில் பட்டி சாலையில் உள்ள காமராஜ் சிலையில் இருந்து அனைத்து கட்சி சார்பில் மவுன அஞ்சலி ஊர்வலம் தொடங்கி, பேருந்து நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலை அருகில் புகழ் அஞ்சலி கூட்டம் நடைபெற்றது சி.பி.ஐ. முன்னால் மாநில நிர்வாககுழு உறுப்பினர் இந்திரஜித், புறநகர் மாவட்ட செயலாளர் பழனிச்சாமி, நகர செயலாளர் ஜனசக்தி உசேன், சி.பி.எம். புறநகர் மாவட்ட செயலாளர் ஜெயசீலன் உட்பட நிர்வாகிகளும், அனைத்து வெகுஜன நிர்வாகிகள் கலந்து கொண்டு மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

**திருவெறும்பூர்:** திருவெறும்பூர் கடை விதியில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திற்கு சிபிஎம் தாலுகா செயலாளர் மல்லிகா தலைமை வகித்தார். சி.பி.ஐ.முன்னாள் மாநில குழு உறுப்பினர் செல்வராஜ், புறநகர் மாவட்ட செயலாளர் செ.ராஜ்குமார், தாலுகா செயலாளர் பழனிச்சாமி, மாதர் சங்க மாவட்ட செயலாளர் மாரியம்மாள் , ஊராட்சி மன்ற தலைவர் ரம்யா, பேரூராட்சி கவுன்சிலர் வைசூர்யா ஜெயக்கொடி, உமா தமிழரசன், தாலுகா துணை செயலாளர் ராதாகிருஷ்ணன், தமிழரசன், தாலுக்கா குழு உறுப்பினர் ஆரோக்கியதாஸ் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

# இந்தியாவின் கடன் ரூ.172.50 லட்சம் கோடியாக உயர்ந்தது

1947 ல் இருந்து 2014 ம் ஆண்டு வரையிலான 67 ஆண்டு காலத்தில் 14 பேர் பிரதமர் பதவியில் அமர்ந்து நாட்டை ஆண்டுள்ளனர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் வாங்கட்டப்பட்ட கடன் ரூ.55 லட்சம் கோடி மட்டுமே.

ஆனால்,பிஜேபி ஆட்சி நடக்கும் 2014 க்கு பிறகான இந்த ஒன்பதரை ஆண்டில் மட்டும் வாங்கிய கடன் ரூ.117 லட்சம் கோடி.

மோடிக்கு முன்பு பிரதமராக இருந்தவர்கள் 188 பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கினார்கள். அதில் 10ஐ தனியார் மயமாக்கினார்கள்

ஆனால் பிரதமர் மோடி இந்த ஒன்பதரை ஆண்டுகளில் ஒரே ஒரு பொதுத்துறை நிறுவனத்தைக்கூட தொடங்கவில்லை

மாறாக பிஜேபி அரசு 23 பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கிவிட்டது. அதோடு நிற்கவில்லை, *National Monetisation Pipeline* எனும் திட்டத்தை கொண்டு வந்துள்ளனர்.

இந்த திட்டத்தின் பெயரில் மிச்சம் மீதியிருப்பதையும் தனியாருக்கு கொடுக்க திட்டமிட்டுள்ளனர்.

# காவி கும்பலின் பிடியில் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகம்!




திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் மத வழிபாட்டை முன்னெடுத்திருப்பதற்கு அகில இந்திய மாணவர் பெருமன்றம் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக தமிழ்நாடு மாநிலத் தலைவர் தினேஷ் சீரங்கராஜ், மாநிலச்செயலாளர் பா.தினேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: திருவாரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தில் 17.11.2023 அன்று தீபோத்சவ் 2023 என்ற பெயரில் தீபாவளி நிகழ்ச்சி நடைபெற்று இருக்கிறது. அதற்காக அமைக்கப்பட்ட நிகழ்வில் ஜெய் ஸ்ரீராம் என்ற வாசகம் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் புரோகிதர்கள் வரவழைக்கப்பட்டு யாக வழிபாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்றிருக்கிறார்.

மதச்சார்பற்ற நிலையை கடைபிடிக்க வேண்டிய மத்திய பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரே அரசு செலவில் மத வழிபாட்டை முன்னெடுத்திருப்பது மாணவர்கள் மத்தியில் அதிர்வலையை ஏற்படுத்தி இருக்கிறது. மேலும் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான மத்திய பல்கலைக்கழக துணைவேந்தரின் இத்தகைய செயல்பாடு வன்மையான கண்டனத்திற்கு உரியது. இதை மாணவர்கள் சுட்டிக் காட்டியதற்கு எதிராக மத அடிப்படைவாத கும்பலான ஏபிவிபி பெரியாரைத் தரக்குறைவாக விமர்சித்து அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது.

மதம், இனம், மொழி, சாதிகளை கடந்து பன்முகத் தன்மையோடு இருக்க வேண்டிய அரசு கல்வி நிலையத்தில் அரசு பணத்திலேயே மத செயல்பாடுகளை முன்னெடுத்த பல்கலைக்கழக துணைவேந்தர் மீது தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பெரியாரைத் தரக்குறைவாக பேசிய ஏபிவிபி அமைப்பின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்துகிறது என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்களை கைவிட்ட ஒன்றிய அரசு!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தமிழக மீனவர்களை ஒன்றிய அரசு கைவிட்டு விட்டது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

ராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் பகுதியை சேர்ந்த இரண்டு மீன் பிடி படகுகளில் நாகபட்டினம் கோடியக்கரை பகுதியில் இருந்து தங்கு கடல் மீன் பிடிப்புக்காக கடந்த 15.11.2023 ஆம் தேதி மீனவர்கள் கடலுக்குள் சென்றுள்ளனர்.

இதில் தங்கச்சிமடம் பகுதியை சேர்ந்த 22 மீனவர்கள் கோடியக்கரைக்கும் , பருத்தித் துறைக்கும் இடையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினர் அவர்கள் 22 பேர்களையும் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர்.

கடலில் மீன் பிடிப்பது மட்டுமே வாழ்வாதாரம் என்ற வாழ்க்கை நிலையில் உள்ள கடலோர மீனவக் கிராமங்கள் அனைத்தும் கடுமையான வேதனையிலும், பாதுகாப்பற்ற பரிதவிப்பிலும் வாழ்ந்து வருகின்றன.

தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி உரிமையில் இலங்கை கடற்படையின் அத்துமீறுவதை இந்திய ஒன்றிய அரசு தலையிட்டு தடுக்க வேண்டும், மீன்பிடி தொழில் முழுமையாக பாதுகாப்புடன் நடைபெறும் சூழல் உருவாக்கப்பட வேண்டும் என மீனவர்களும், அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் தொடர்ந்து பாஜக ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசும், முதலமைச்சரும், நாட்டின் பிரதமர், ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் மீனவர் பாதுகாப்புக்கு உரிய ஏற்பாடு செய்ய தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார்.

ஆனாலும் இலங்கை அரசுடன் இந்திய ஒன்றிய அரசு மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்து திட்டவட்டமான பேச்சு வார்த்தை தொடங்கியதாக தெரியவில்லை. தமிழ்நாட்டு மீனவர்களும் இந்திய நாட்டின் குடிமக்கள் தான் என்பதை ஒன்றிய அரசு கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விடுவித்து, அவர்களது உடைமைகளுடன் நாடு திரும்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

நீண்ட கடற்கரையை பெற்றுள்ள தமிழ்நாட்டின் ஆயிரக்கணக்கான மீனவக் கிராமங்களில் வாழ்ந்து வரும் லட்சக்கணக்கான மீனவர்களின் மீன்பிடி உரிமையை பாதுகாக்க, ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நாட்டின் பிரதமர் மோடியை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.


என்.எஸ்.பிரதாப் சந்திரன்

# அறநிலையத்துறையை சங்கி கும்பல் அகற்றத் துடிப்பது ஏன்?

**தெலுங்கானாவின் நிஜாமாபாத்தில் நடந்த பாரதிய ஜனதா கட்சியின் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய பிரதமர் நரேந்திர மோடி "தமிழ்நாட்டில் உள்ள கோவில்களை அம்மாநில அரசு ஆக்கிரமித்துள்ளது. கோவில்களை அரசு தனது தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அநீதியானது.**

ஆனால், சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்கள் மீது அவர்கள் கை வைப்பதே இல்லை. அவற்றை அரசு கட்டுபாட்டுக்குள் கொண்டு வர மாட்டார்கள்.

ஆனால் கோவில்களை மட்டும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கிறார்கள். கோவில்களில் வரும் வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுகின்றன என்றெல்லாம் பேசி உள்ளார்.

பிரதமராக உள்ள ஒருவர் தனது தகுதியை மீறி, ஒரு சங்கியாக மாறினால் எப்படி ஒரு செய்தியை உண்மைக்கு மாறாக புரட்டி பேச முடியும் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

உண்மையில் தமிழ்நாடு அரசு கோவில் சொத்துக்களை, அதன் வருமானத்தை, நிதியை தவறாக பயன்படுத்துகிறதோ என்கிற ஐயத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, மக்களை மாநில அரசுக்கு எதிராக ஒரு பிரதமரே தூண்டி விடுகிறார் என்பதை நாம் இதன் மூலம் கண்கூடாக காண முடிகிறது.

தமிழ்நாட்டில் தற்போது சுமார் 44 ஆயிரம் கோவில்களை இந்து சமய அறநிலைத்துறை நிர்வகித்து வருகிறது. இவற்றில் சுமார் 300 பெரிய கோயில்களின் ஆண்டு வருமானம் ரூபாய் பல கோடிகளைத் தாண்டுகிறது. 650 கோயில்களில் வருமானம் பல லட்ச ரூபாயாக உள்ளது.

ஏனைய பெரும்பாலான கோயில்களில் வருமானம் ஆண்டுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இந்த கோயில்களுக்கு சொந்தமாக ஐந்து லட்சம் ஏக்கர் நிலங்களும், 22,600 கட்டிடங்களும், 33 ஆயிரத்து 655 மனைகளும் உள்ளன. இவற்றில் இருந்து வரும் வருவாய் மூலம், ஆயிரக்கணக்கான கோயில்களை நிர்வகிக்கவும், கோவில்களில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கவும் கூட போதுமானதாக இல்லை என்பதே உண்மை நிலை.

இப்படி போதுமான வருவாய் இல்லாத கோவில்களுக்கு , ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் வைப்புத் தொகையை, தற்போதைய தி.மு.க. அரசு 2 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது. கோயில் பெயரில் வங்கியில் வைப்புத் தொகை செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டியின் மூலம் கோயில்களின் நிர்வாக செலவை சமாளிப்பது ஒரு கால பூஜை திட்டம்.

வருவாய் இல்லாத கோவில்களும் இருளில் மூழ்கி விடாமல், ஒரு விளக்காவது ஏற்றப்பட வேண்டும் என்பதற்காக இத்திட்டத்தை இன்றைய தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த அரசின் மீது தான் வேண்டுமென்றே சங்கிகள் திட்டமிட்டு அவதூறு பரப்பி வருகிறார்கள்.

மன்னர்கள் ஆட்சி முடிந்து, கிழக்கிந்திய கம்பெனியின் வசம் ஆட்சி சென்றபோது கோவில்கள், அவற்றின் சொத்துக்கள் தனிநபர் வசமும், தனி குடும்பங்கள் வசமும் சென்றன. ஆகவே அவை தனியார் நிறுவனங்களாக செயல்பட்டன. அப்போது, திருக்கோவில் சொத்துக்களை அவர்கள் தங்கள் சொந்த லாபத்திற்காக பயன்படுத்துவதாக பக்தர்கள் கிழக்கிந்திய கம்பெனியிடம் புகார் தெரிவித்தனர். இதனால் திருக்கோவில்கள் அறக்கட்டளைகளை பொது மேற்பார்வை செய்யும் அதிகாரம் 1817 இல் வருவாய் வாரியத்திற்கு வழங்கப்பட்டது. இந்த சட்டம் மேம்படுத்தப்பட்டு சமய கட்டளைகள் சட்டம் 1863 இயற்றப்பட்டது. இதன் மூலம் அன்றைக்கு 21மாவட்டங்களில் இருந்த 8892 கோவில்கள் அரசின் நேரடி கட்டுப்பட்டிற்க்கு கொண்டுவரப்பட்டன. ஊழல் புரிந்த தர்மகர்த்தாக்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். மூடிக்கிடந்த கோவில்கள் வழிபாட்டிற்கு திறந்து விடப்பட்டன.

1920 இல் நடைபெற்ற மதராஸ் மாகாண சட்டமன்றத் தேர்தலில், நீதிக் கட்சியின் சார்பில் வெற்றி பெற்று முதலமைச்சரான பனகல் அரசர். 1922 இல் இந்து பரிபாலன சட்டத்தை அறிமுகப்படுத்தினார். நீண்ட விவாதத்திற்கு பின் பல்வேறு திருத்தங்களுடன் இன்றைய இந்து சமய அறநிலையத்துறை சட்டம் உருவாக்கப்பட்டது.

பின்னர் 1947 முதல் 49 வரை முதல்வராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பல திருத்தங்களை கொண்டு வந்து, இந்து சமய அறநிலைத்துறையை அரசுத்துறையாக மாற்றினார். 1957 இல் முதலமைச்சர் ஆன காமராஜர் மேலும் பல மாற்றங்களை கொண்டு வந்து அறநிலைத்துறை சட்டத்தை வலிமைப்படுத்தினார். ஆலயங்களில் அனுமதிக்கப்படாத தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவரையே அத்துறையின் அமைச்சராக்கிய பெருமை காமராசரையே சேரும்.

ஒரு பொது ஸ்தாபனத்தை பாதுகாப்பதற்காக தமிழகத்தை ஆண்ட பல தலைவர்களும் முயன்று ஒரு சட்டத்தை கொண்டு வந்து கோவில்களையும், அதன் சொத்துக்களையும் பாதுகாக்கும் போது, இன்றைய தமிழக அரசுதான், இந்த சட்டத்தை கொண்டு வந்து கோயில்களை ஆக்கிரமித்து உள்ளது போன்றும், அதன் நிதியை தவறாக பயன்படுத்துகிறது என்பது போன்ற மாய தோற்றத்தை உருவாக்க சங்கிகள் முயலுகின்றனர். இவர்களது கருத்துக்கு வலுசேர்க்கும் வகையில் தான் பிரதமர் மோடியின் உரையும் உள்ளது. ஆனால் உண்மை என்ன?

கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி முதல் காமராஜ் ஆட்சி வரை இந்த சட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.இந்த சட்டத்தை மிக வலிமையாக கொண்டு வர காரணமாக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பழுத்த ஆத்திகர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இது ஒரு தவறான சட்டம் என்றால் பின்னர் ஆட்சிக்கு வந்த ஆத்திகரான ஜெயலலிதா இவற்றை ரத்து செய்திருக்க மாட்டாரா?

தமிழக அரசு கோவில் நிதிகளை வேறு துறைகளின் பயன்பாட்டிற்கு மாற்றி விடுவதாக சங்கிகள் பொய்யாக குற்றம் சாட்டுகின்றனர். ஒவ்வொரு கோவில்களும் தனித்தனி அறக்கட்டளைகளாக பாவிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கோவிலுக்கும் தனித்தனி வங்கிக் கணக்குகள் உள்ளது. அதன் பணியாளர்களுக்கு மட்டும் கோவில் நிதியில் இருந்து ஊதியம் வழங்கப்படுகிறது. உண்மை இவ்வாறு இருக்க பொய் செய்திகளை சங்கீகள் ஏன் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு அரசியலில் எப்படியாவது கால் ஊன்றி விட வேண்டும் என்பதற்காகதான். இது போன்ற செய்திகளை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை தான் இந்திய பிரதமரும் தமிழ்நாட்டிற்கு வெளியில், தமிழ்நாட்டை குறித்து அவதூறான வகையில் பேசியிருக்கிறார். தமிழ்நாட்டின் அறநிலையத்துறையை பற்றி பேசும் பிரதமர் மோடி, தனது தொந்த மாநிலமான குஜராத் பற்றியும், மற்ற மாநிலங்களின் கோயில்களை நிர்வகிக்கும் நிறுவனங்களைப் பற்றியும் பேச மறுப்பதன் மர்மம் என்ன?

கோவில்களை அரசுக்கட்டுபாட்டில் இருந்து மீட்டு, யாரிடம் கொடுக்க வேண்டும்என்று மோடி விரும்புகிறார்? அறங்காவலர்கள் என்ற பெயரில் கோவில்களில் அட்டூழியங்களில் தனிநபர்கள் ஈடுபட்டதின் காரணமாக தான் அறநிலையத்துறை உருவானது என்பதை மோடி அறியமாட்டாரா? காலசக்கரத்தை மோடி பின்னோக்கி இழுக்கலாமா?

இந்தியாவின் நவீன கோவில்கள் என்று சொல்லப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் தனியாருக்கு தாரைவாத்துக் கொண்டிருக்கும் சங்கிகள். அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் கோயில்களையும் தனியாருக்கு கொடுத்து விட துடியாய் துடிக்கின்றனர். இவர்களது நோக்கம் கோவில் சொத்துக்களை பாதுகாப்பது அல்ல.மாறாக கொள்ளையடிப்பது என்பதை தமிழ் சமூகம் நன்றாகவே புரிந்து வைத்திருக்கிறது. கோவில்களை களவாடி சங்கிகளின் கலவரக் கூடாரமாக்க நினைக்கிறார்கள், சாதியின் பெயராலும், சனாதனத்தின் பெயராலும் சதிராட நினைக்கிறார்கள் என்பதைபுரிந்ததால்தான்தமிழ்நாட்டின் கோவில்களை பாதுகாக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் ஆத்திகராக மட்டுமல்லாமல், நாத்திகர்களாகவும் இருக்கிறார்கள்.

கோவில்கள் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்று நினைப்பவர்கள் தமிழ்நாட்டில் நாத்திகர்கள் மட்டுமல்ல, ஆத்திகர்களும் தான்

தமிழர்களை கோவில்களின் பெயரால், மதத்தின் பெயரால். ஆத்திகர், நாத்திகர் என பிரித்து மோத விடலாம் என நினைக்கும் மோடியின் பாச்சா ஒருபோதும் பலிக்காது.

தொடர்புக்கு; 9382679798



## அரசு புறம்போக்கு நிலத்தை அளவீடு செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திருவண்ணாமலை மாவட்டம் குப்பநத்தம் ஜெ.ஜெ.நகர் பகுதியில் உள்ள அரசின் புறம்போக்கு நிலம் சுமார் 60 ஏக்கரை முழுவதுமாக அளவீடு செய்து, வருவாய்த்துறை கணக்கில் கொண்டுவர வலியுறுத்தி செங்கம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு "கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்" நடைபெற்றது.

## சிபிஐ காத்திருப்பு போராட்டம் அறிவிப்பு!

### ஆக்கிரமிப்பை அகற்ற பூதலூர் வட்டாட்சியர் கடிதம்

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டம் வெண்டையம்பட்டி கிராமத்தில், காளியம்மன் கோவில் தெரு ஆக்கிரமிக்கப்பட்டது தொடர்பாக சர்வே செய்து, ஆக்கிரமிப்பு அகற்றி, சாலையை சீர்படுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், ஆகஸ்ட் 17ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தினை யொட்டி பூதலூர் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் நடத்திய பேச்சு வார்த்தையில் 30 நாட்களுக்குள் பிரச்சனைக்குரிய காளியம்மன் கோவில் தெரு ஆக்கிரமிப்பு, சர்வே நடத்தி சாலைகள் சீர்படுத்தப்படும் என உறுதி அளித்தனர். அவர்கள் உறுதி அளித்த அடிப்படையில் எவ்வித நடவடிக்கையும் இல்லாத நிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நவம்பர் 15.11.23 அன்று காத்திருப்பு போராட்டம் நடத்துவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் பூதலூர் வட்டாட்சியர் 14.11.23 அன்று சர்வே செய்து ,மோசமான சாலைகள் சீர்படுத்தப்படும் என தெரிவித்துள்ளார்.

### மாணவர்களிடம் கூடுதலாக வசூலித்த

## கல்வி கட்டணத்தை திருப்பி செலுத்த ஏஐஎஸ்எப் வலியுறுத்தல்

அரசு உதவிபெறும் குருநானக் கல்லூரியில் அரசு பாடப்பி ரிவுகளுக்கு அரசு நிர்ணயித்த கல்வி கட்டணத்தை விட கூடுதலாக வசூலிக்கும் குருநானக் கல்லூரி நிர்வாகத்தை கண்டித்து, மாணவர்கள் பல போராட்டத்தை நடத்தினர். கல்லூரி மாணவர்கள் இருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர். தீர்ப்பு மாணவர்களுக்கு சாதகமாக மாணவர்களிடம் கூடுதலாக வசூலித்த கட்டணத்தை திரும்ப தரவும் உத்தரவிட்டது. இந்நிலையில் கல்லூரி கல்வி இணை இயக்குனரை தென் சென்னை மாவட்ட செயலாளர் ஆ.மணிகண்டன், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் வி.வித்யா, மாநில குழு உறுப்பினர்கள் சதீஷ் மற்றும் ஆகாஷ் ஆகியோர் நேரில் சந்தித்து, மாணவர்கள் இருவருக்கும் உடனடியாக பணத்தை திரும்ப தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

## சங்கரதாஸ் சாமிகள் 101வது நினைவுநாள்

சங்கரதாஸ் சாமிகள் 101 வது நினைவஞ்சலி விழா புதுச்சேரி அரசு மற்றும் கலை இலக்கிய பெருமன்றத்தின் சார்பில், ஊர்வலம் அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தென்னிந்திய நடிகர் சங்க தலைவர் நாசர், பொதுப்பணித்துறை அமைச்சர் க.லட்சுமி நாராயணன், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் சிவா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் அ. மு. சலீம், கலை இலக்கியப் பெருமன்ற சிறப்பு தலைவர் கலைமாமணி மு. கு.இராமன், தலைவர் எல்லை. சிவக்குமார் பொதுச்செயலாளர் பெ. பால கங்காதரன், பொருளாளர் துரை. செல்வம் உட்பட ஏராளமான கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

### வினாடி – வினா விடைகள்

1. 1862 ஜூன் 26
2. சுப்ரீம் கோர்ட் ஆஃப் மெட்ராஸ்
3. சர் டி.முத்துசாமி ஐயர் (1878 ஆம் ஆண்டு)
4. 2004 ஆம் ஆண்டு மதுரையில்
5. 1892 ஜூலை 12
6. ஆங்கிலம்

# பட்டியலின மக்களின் கோரிக்கையை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம்



பட்டியலின மக்களின் கோரிக்கை வலியுறுத்தி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம், ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணியும், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கமும் இணைந்து கையெழுத்து இயக்கம் நடத்தியது.

**செங்கல்பட்டு:** செங்கல்பட்டில் தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட செயலாளர் சி.சங்கர் தலைமையில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் பி.எஸ்.எல்லப்பன் முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார். இதில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ், விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் பி.எஸ்.ராமலிங்கம், ஒடுக்கப்பட்ட வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட தலைவர் மு.கர்ணன் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் பங்கேற்றனர்.

**கோவை:** சூலூர் தெற்கு வட்டார கிளையின் சார்பில் இருகூரில் மாநில குழு உறுப்பினர் பி.சக்திவேல் தலைமை ஏற்க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பெ.மௌனசாமி கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் சூலூர் தெற்கு வட்டார கிளையின் செயலாளர் சூ.பே.நடராசு, காமாட்சி புரம் கிளைச் செயலாளர் கே.பொன்ராஜ், இருகூர் கிளை துணைச் செயலாளர் கி.சௌந்தர்ராஜன், ஏஐஎஸ்எப் மாவட்டக்குழு உறுப்பினர் கே.ஜி.பவன்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவை வடக்கு மண்டலம் மாவட்டத் தலைவர் பி.முருகன் தலைமையில் மாநிலப் பொருளாளர் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியன் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் தோழர் அ.அசரப் அலி முன்னாள் மாமன்ற உறுப்பினர் தோழர் ஆர்.சந்திரசேகரன், கிளைச் செயலாளர் என்.விஸ்வநாதன் உள்ளிட்டோர் சார்பில் கோவை மாநகராட்சி 43வது வார்டு அலுவலகம் முன்பு மாவட்டச் செயலாளர் அசரப் அலி தலைமையில் நடைபெற்றது.




அமைப்பின் மாவட்டத் துணைத் தலைவரும், முன்னாள் மாமன்ற உறுப்பினருமான கே.புருஷோத்தமன் துவக்கி வைத்தார். கட்சிக்கிளையின் துணைச் செயலாளர் மா.அன்பழகன், தோழர்கள் பி.செந்தில்குமார், பி.சண்முகசுந்தரம், கோவை மாநகராட்சி சுகாதார பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பூபேஷ்குப்தா நினைவுப்படிப்பகம் அருகில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

ஏஐடியுசி கட்டிட தொழிலாளர் சங்கத்தின் கிளைச் செயலாளர் அ.மோகன், குத்தூசி குருசாமி படிப்பகத்தின் பொறுப்பாளர் சா.கதிரவன், செயல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆ.நந்தகுமார், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொறுப்பாளர் ம.ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் த.கு.வெங்கடேஷ் வேம்பு, கட்சியின் மாவட்ட செயலாளர் கே.ராஜேந்திரன், மீஞ்சூர் எம்.ஆனந்தன், என்.எஸ்.பிரதாப் சந்திரன் பி.வி.செந்தில், வி.இ.ராஜீவ்காந்தி, ஆர்.சரத்ராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

திருவள்ளூரில், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில். கையெழுத்து இயக்கம் நடைபெற்றது . இதில் தமிழ்நாடு ஏ ஐ டி யு சி மாநில பொதுச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார். உடன் கட்சியின் மாவட்ட செயலாளராகே. கஜேந்திரன், சங்கத்தின் மாவட்ட தலைவர் டி.கே. ராஜா, செயலாளர் என்.எஸ்.பிரதாப்சந்திரன், பொருளாளர் வி. சரவணன், மதியழகன், துரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்

**விருதுநகர்:** விருதுநகர் பேருந்து நிலையம் முன்பு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார் தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் முருகேசன் முன்னிலை வகித்தார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன் ,நகர செயலாளர் முத்துக்குமார், ஏஐடியுசி பாண்டியன், மாதர்சங்க மாரீஸ்வரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

**கள்ளக்குறிச்சி:** தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகரில் மணிக்கூண்டு திடலில் மாவட்ட செயலாளர் எம். வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு கையெழுத்து இட்டு துவக்கி வைத்தார்.

இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் கே.இராமசாமி, இஸ்லாமிய ஐக்கிய பேரவையின் மாநில துணை தலைவர் மக்காகலில், சிபிஎம் மாவட்ட செயலாளர் ஜெய்சங்கர், புரட்சி பாரதம் மாவட்ட தலைவர் ஆறுமுகம் ,அ.வி.தொ.ச மாவட்ட தலைவர் சுப்பிரமணியன், இளைஞர் பெருமன்றம் மாவட்ட பொருளாளர் ராமன் உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர்.

**தர்மபுரி:** தருமபுரி பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன் மாநில செயலாளருமான ஜெ. பிரதாபன் தலைமையில் துவங்கியது. தருமபுரி ஒன்றியம் வத்தல்மலை கொட்டலாங்காட்டில் சங்க ஒன்றிய தலைவர் ஜி. ராஜகோபால் தலைமையில், ஒன்றிய துணைத்தலைவர் ராஜமாணிக்கம்,மாவட்டக்குழு உறுப்பினர்கள் கோவிந்தன்,ராமசாமி ஆகியோர் கையெழுத்து பெற்றனர்.

## கட்சி வளர்ச்சி நிதி



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா. விஜயகுமார், ரோஷினி தம்பதியரின் மகள் வி. கீர்த்திகா எஸ். பி. கேசவன் ஆகியோரின் திருமண விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் விடுதலைப் போராட்ட வீரர் இரா நல்லகண்ணு, மாநிலத் துணைச் செயலாளர்கள் நா. பெரியசாமி, மு. வீரபாண்டியன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் க. சந்தானம், அமைச்சர் பி. கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, எம். டி. ஆர். நாகராஜ், முன்னாள் அமைச்சர் பா. பெஞ்சமின், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி. அலெக்ஸாண்டர், தாமரை ஆசிரியர் சி. மகேந்திரன், ஜனசக்தி லெனின், இளசை கணேசன், மத்திய சென்னை பா.கருணாநிதி, தென் சென்னை எஸ். கே. சிவா, திருவள்ளூர் கே. கஜேந்திரன், ஏஐடியூசி மாநிலத் துணைத் தலைவர் ஏ. எஸ். கண்ணன், கட்டட சங்கம் மாநிலச் செயலாளர் இரா. துரைசாமி, ஆட்டோ சங்க மாநில பொதுச் செயலாளர் ப. மாரியப்பன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள்.

இரா. விஜயகுமார் குடும்பத்தின் சார்பில் கட்சி நிதியாக ரூபாய் 50,000 ஆர்.நல்லகண்ணு, நா. பெரியசாமி ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

# பாலஸ்தீனம் மீதான இஸ்ரேல் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்




பாலஸ்தீனம் மீதான இஸ்ரேல் தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருச்சி புறநகர்:** திருச்சி புறநகர் மாவட்டம் திருவெறும்பூர் கடைவீதியில், பாலஸ்தீனம் மீதான தாக்குதலைக் கண்டித்து இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய மாதர் தேசிய சம்மேளனம் புறநகர் மாவட்டசெயலாளர் பி. மாரியம்மாள் தலைமை வகித்தார். கிருஷ்ண சமுத்திரம் ஊராட்சி தலைவர் ரம்யா, அகிலாண்டேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், முன்னால் மாநிலகுழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்தினார்கள். இந்திய மாதர் தேசிய சம்மேளன நிர்வாகிகள் கலந்துகொண்டு கண்டன முழக்கம் மீட்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமை வகித்தார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, சிபிஎம் மாவட்ட செயலாளர் அர்ச்சுணன் ஆகியோர் பேசினார்கள். இராஜபாளையம் சத்திரப்பட்டியில் சிபிஐ ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் தலைமை வகித்தார் . சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி பேசினார்கள் .

சாத்தூர் ஏழாயிரம்பண்ணையில் சிபிஐ வட்ட துணை செயலாளர் பாண்டி தலைமை வகித்தார். சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் சுவாமிநாதன், சிபிஎம் மாவட்ட செயற்குழு சுந்தரபாண்டியன், வட்ட செயலாளர் சரோஜா ஆகியோர் பேசினார்கள் . சேத்தூரில் சிபிஐ ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமை வகித்தார். வழக்கறிஞர் பகத்சிங் மற்றும் சிபிஎம் நிர்வாகிகள் பேசினார்கள்.

# பயிர் காப்பீடு செய்ய ஆவணம் கோரிய பூதலூர் விவசாயிகள் போராட்டம் வெற்றி!



தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தாலுக்கா வெண்டையம்பட்டி கிராமத்தில் கோவிலுக்கு, சொந்தமான நிலங்களில் 89 விவசாயிகள் ஆண்டாண்டு காலமாக விவசாயம் செய்து வருகின்றனர். இப்பகுதியில் உய்யக்கொண்டான் நீட்டிப்பு வாய்க்கால் மூலம் ஒருபோக சம்பா சாகுபடி மட்டுமே செய்யப்பட்டு வருகிறது.

கடந்தாண்டு பருவம் தவறிய மழையால் சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டதால் குத்தகை பாக்கி செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் சம்பா பயிர்காப்பீடு செய்ய விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலரை அணுகியபோது குத்தகை பாக்கி உள்ளதால் சிட்டாஅடங்கல் தர வேண்டாமென கோயில் நிர்வாகம் கூறிவிட்டதால் சிட்டா அடங்கல் தர முடியாது என தெரிவித்ததை தொடர்ந்து,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கிராம நிர்வாக அலுவலகம் முன்பு தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து,விவசாயிகள் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நேரிடையாக முறையிட்டனர். அதன் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் நடைப்பெற்றது. கூட்டத்தில் சிட்டா, அடங்கல் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டதால் போராட்டம் ரத்து செய்யப்பட்டது.

# பயிர் பாதிப்புகளுக்கு இழப்பீடு அரசே வழங்க வேண்டும்

**மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வலியுறுத்தல்**



மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் சீர்காழியில் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, முன்னாள் எம்.எல்.ஏவும், விவசாயிகள் சங்க மாநில நிர்வாக குழு உறுப்பினருமான கே.உலகநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன், மாவட்ட விவசாய சங்கச் செயலாளர் வீரராஜன், வி.ச.மாவட்ட துணை செயலாளர் கே.எஸ்.சிவராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்குப் பின்னர் சங்க மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி செய்தியாளர்களிடம் கூறியது: வேளாண் பாதுகாப்பு மண்டலத்தில் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்த்தற்கு தமிழக முதல்வருக்கு நன்றி. அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களையும் சேர்க்க வேண்டும் என்று கோரியிருந்தோம். அது குறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

தற்போது பெய்த மழையில் மாவட்டத்தில் 3 வட்டாரங்களில் 2,888 ஹெக்டேர் பயிர் பாதிப்பு, 150 வீடுகள் பாதிப்பு, 39 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாக அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் இன்னும் கூடுதல் பாதிப்பு உள்ளது. மழையால் மட்டும் அல்ல, மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறக்கப்பட்டாலும் மயிலாடுதுறை மாவட்டத்துக்கு முழுமையாக தண்ணீர் வந்து சேராதாலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டம் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

கடந்த 2022–23 ல் தமிழக முதல்வர் இப்பகுதிகளை பார்வையிட்டு உரிய உதவிகள் செய்யப்படும் என்று அறிவித்தார். ஆனால் குறைந்தபட்ச நிவாரணத்தை அறிவித்து, பின்னர் பேரிடர் பாதிப்பின் அடிப்படையில் காப்பீட்டு இழப்பீடு கிடைக்கும் என்று சொன்னார். நிகழாண்டு காப்பீட்டு திட்டத்தை அறிவிக்கும்போது ஒட்டுமொத்த தமிழகத்துக்கும் மிகப்பெரிய துரோகம் இழைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான காப்பீட்டு திட்டமா, கம்பெனிகளுக்கு லாபம் அளிக்கும் திட்டமா என்ற கேள்வி எழுகிறது. ஆகவே காப்பீட்டு திட்டத்தைச் சொல்லி அரசு தட்டிக் கழிக்க கூடாது. எனவே பாதிப்புகள் குறித்து உரிய வகையில் கணக்கிட்டு, உரிய உதவிகளை செய்ய வேண்டும் என்று கூறினார்.

### திருச்சி HEPF

# தொழிற்சாலை நிர்வாகத்தை கண்டித்து தொடர் போராட்டம்



திருச்சி HEPF தொழிற்சாலை இந்த ஆண்டிற்கான உற்பத்தி இலக்கை அடைய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், தொழிலாளர்களுக்கு ஊதிய இழப்பை ஏற்படுத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், தேவையான மூலப் பொருட்கள் உடனடியாக தரவேண்டும். தேவையான Tools and Gauges வழங்க வேண்டும், தொழிலாளர்கள் மீது தொடுத்து வரும் அடக்குமுறையை கைவிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன வாரம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற மனித சங்கிலி போராட்டத்திற்கு சங்கத்தின் உதவி தலைவர் விஜயன் தலைமை வகித்தார் . சங்கத்தின் பொதுச் செயலாளர் இரணியன் கண்டன உரை நிகழ்தினார். தொழிலாளர்கள் திரளாக பங்கேற்றனர்.

### இராஜபாளையத்தில்

# அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற பயிலரங்கம்




விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் பிஎம்ஆர் முத்து மகாலில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாவட்ட அளவிலான பயிலரங்கம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி தலைமை வகித்தார். சிபிஐ மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன், இளைஞர் மன்ற மாநில பொதுச்செயலாளர் க.பாரதி ஆகியோர் கருத்துரை ஆற்றினார்கள். மாவட்டம் முழுவதும் உறுப்பினர் இயக்கத்தை நடத்தி, கட்சி கிளைகள்தோறும் இளைஞர்பெருமன்ற கிளைகளை அமைப்பது என முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட .நி.உறுப்பினர் இரவி , ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி உள்பட மாவட்டம் முழுவதுமிருந்து இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்.

# வியாசர்பாடி சி.கல்யாணி மறைவு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பெரம்பூர் தொகுதி வியாசர்பாடி, கென்னடி நகர் 46வது வட்ட கிளை முன்னணி தோழர் எஸ்.ஏழுமலை அவர்களின் சகோதரி சி.கல்யாணி (வயது59) இயற்கை எய்தினார்.

அவருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரம்பூர் பகுதி செயலாளர் இரா.கோட்டிசுரேஷ், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.கருணாகரன், மாவட்டக்குழு உறுப்பினர் வேதாசலம் ஏ.மஸ்தன், எஸ், ஏழுமலை.ஏ.மாரிமுத்து, மற்றும் தோழர்கள் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார்கள்.

## இந்த வார தம்பிக்குறள்

**140. தன்னை அடக்கும் அடக்கம்**

**அண்டம் அடக்கும் அடக்கம் அளவாஅம்**
**தன்னை அடக்கும் அளவு.**

ஒருவன் தன்னை அடக்கிக் கொள்ளல் இயலாது. பேரண்டம் முழுதின் இயக்கத்தை அடக்க இயலுமானால், ஒருவன் தன்னை அடக்கலாம் (இயலாது என்பது கருத்து).

**ஒருபத்து ஆட்கள் உனக்களித்தாள் அன்னை**
**இருகைகால் இன்னபல பத்து.**

இயற்கை நமக்கு கைவிரல்கள் பத்தும், கால்விரல்கள் பத்தும் அளித்துள்ளாள். இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் அளித்துள்ளாள்.



ஆர்.பாலச்சந்திரன்

# இயக்கம் வளர்த்த தலைவர் பி.சி.ஜோஷி



**இந்தியாவில் பொதுவுடமை இயக்கம் உறுதியான முறையில் காலூன்ற அடிப்படைப் பணிகளைச்செய்தவர் 'பி சி ஜோஷி' ஆவார். பி.சி.ஜோசி என்று அன்புடன் அழைக்கப்படும் பூரணச்சந்திர ஜோஷி அவர்கள் உத்திரப் பிரதேசத்தில் அல்மோரா என்னுமிடத்தில் 1907ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் நாள் பிறந்தார்.**

இவர் தனது உயர்நிலைக்கல்விக்குப் பின்னர் அலகபாத் பல்கலைக் கழகத்தில் வழக்கறிஞர் கல்விக்கான எல்.எல்.பி வகுப்பில் சேர்ந்து பயின்றார். பின்னர் பொதுவுடமை இயக்கத் தொடர்பு காரணமாகக் கைது செய்யப்பட்டார். சிறையிலிருந்தே தேர்வு எழுதி வெற்றிபெற்றார்.

1917ஆம் ஆண்டு ருஷ்யாவில் ஏற்பட்ட சோஷலிசப் புரட்சி உலகையே குலுக்கியது. .பகத்சிங் மற்றும் அவர்களது தோழர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பொங்கியெழுந்தனர். அது போலவே ருஷ்யப் புரட்சியின் தாக்கம் பி.சி.ஜோஷியையும் ஆட்கொண்டது.. மார்க்ஸியம் மற்றும் கம்யூனிஸக் கொள்கைகள் மேல் ஆர்வம் கொண்டார். கம்யூனிஸ்ட் ஊழியராக மலர்ந்தார். மாவீரன் பகத்சிங் தான் தூக்கிலிடப்படும் தருவாயில் படித்துக்கொண்டேயிருந்த லெனின் எழுதிய ' அரசும் புரட்சியும்' நூலை அவருக்குத்தந்தவர் பி.சி.ஜோஷியே ஆவார். கம்யூனிஸ இயக்கம் வேகமாக வளர்வதைக் கண்ட ஆங்கிலேய அரசு அதை முளையிலேயே கிள்ளிஎறிய முயன்று கம்யூனிஸ்ட்கள் மேல் சதிவழக்கு தொடர்ந்தது.. மிஸாபர் அஹமது,எஸ் ஏ டாங்கே, எஸ் வி காட்டே, எஸ்.எஸ். மிராஜ்கர், பி.சி.ஜோஷி ஆகியோர் உள்ளிட்ட 31 கம்யூனிஸ்ட்களைக் கைது செய்தது..இந்த சதிவழக்கின் பெயரே மீரட் சதி வழக்கு ஆகும்.

ஜோஷிமீது ஒரு மாணவர் கம்யூனிஸ்ட் என்ற முறையில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க முயற்சித்தார் எனவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அச்சமயம் அவருக்கு வயது 22. அலகபாத் பல்கலைக் கழகத்தில் சட்டப்படிப்பு மாணவராக இருந்தார் மீரட் சிறைச்சாலையில் இருந்தபோது மார்க்ஸிய நூல்கள் அனைத்தையும் படிக்கும் வாய்ப்பு ஜோஷிக்குக் கிடைத்தது. 1933ஆம் ஆண்டில்விடுதலைசெய்யப்பட்டார்.பின்னர் கட்சிப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட்கட்சி 1936ஆம் ஆண்டு பி.சி ஜோஷியை பொதுச்செயலாளராகத்தேர்ந்தெடுத்தது. அப்போது அவருக்கு வயது 28.பி.சி.ஜோஷி கட்சியைக் கட்டுவதில் தனது அனைத்து ஆற்றல்களையும் பயன் படுத்தினார்.

ஜோஷியின் முயற்சியின் பேரில் முற்போக்கு எண்ணம் கொண்ட எழுத்தாளர்களையும், கலைஞர்களையும் ஒருங்கிணைத்து லாகூரில் 1936ஆம் ஆண்டு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் துவக்கப்பட்டது. பின்னர் இந்திய மக்கள் நாடக மன்றம் (இப்டா) துவக்கப்பட்டது.1936ஆம் ஆண்டே அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் துவக்கப் பட்டது. அதே ஆண்டு 1936இல் அகில இந்திய விவசாயிகள் சங்கம் துவக்கப்பட்டது. மாதர் இயக்கமும் உருவாக்கப்பட்டது. ஜோஷியின் ஈடு இணையற்ற திறமை, கட்சியைக் கட்டுவதில் வெளியானது 1937ஆம் ஆண்டுமுதல்1939 வரைப்பட்ட குறுகிய மூன்றாண்டு காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாபெரும் சக்தியாகத் தோன்றியது.

சிட்டகாங் வீராங்கனை தோழியர் 'கல்பனாதத்'தை திருமணம் செய்துகொண்டார்.1943ஆம் ஆண்டு வங்காளத்தில் வரலாறு காணாத பஞ்சம் ஏற்பட்டு லட்சக்கணக்கானோர் அனாதைகளாக மடிந்தனர். இச்செய்தி அறிந்ததும் ஜோஷி அங்கேசென்று நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். இந்தியாமுழுவதும் பிரச்சாரம் செய்து நிதி திரட்டினார்.. கட்சி முழுவீச்சில் நிவாரணிப் பணிகளில் இறங்கியது.

1946இல் நடைபெற்ற கடற்படை எழுச்சிக்கு ஆதரவாக மக்களைத்திரட்டிப் போராடியது கம்யூனிஸ்ட் கட்சி. பம்பாயில் கடற்படை வீரர்களுடன் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் சேர்ந்து அணிவகுப்பு நடத்தினர். பிரிட்டிஷார் கடும் அடக்குமுறையை ஏவினர். சுமார் 600பேர் கொல்லப்பட்டனர். கடற்படை வீரர்கள் தங்கள் கப்பல்களில் செங்கொடி ஏற்றிப் போராடியது ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு பெரும் திகிலை அளித்தது. இது இந்திய விடுதலையை விரைவுபடுத்தியது.

1945க்குப்பின் சுதந்திரம் அடைந்த காலம் வரை கட்சியின் செயல்பாடுகள் எழுச்சிமிக்கதாய் இருந்தது. தெபாகா விவசாயிகள் போராட்டம், புன்னப்புரா வயலாறு போராட்டம், கப்பற்படை எழுச்சி. தெலுங்கானாப் போராட்டம் ஆகியவை அனைத்தும் இக் காலகட்டத்தில் நிகழ்ந்தவை.

ஜோஷியின் கட்சிப் பணி மகத்தானது. கட்சி தனது பணிகளுக்கு மக்களிடமிருந்துதான் பணம் திரட்டவேண்டுமென்ற கொள்கையில் உறுதியாக இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சிக்கே உரித்தான முறை என்று சொல்லப்படும் உண்டியல் வசூல் முறை இவர் உருவாக்கியதே. கம்யூனிஸ்ட் கட்சியில் பத்திரிக்கைத்துறையை உருவாக்கியவர்இவரேசிறந்த ஆய்வாளராக விளங்கினார். இவர் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில்உருவாக்கிய பி.சி ஜோஷி ஆய்வு மையம் இன்றளவும் சிறப்புடன் இயங்கிவருகின்றது. மிகச்சிறப்பானமுறையில் இயக்கத்தைக் கட்டிக்காத்தமாபெரும்தோழர்பி.சி.ஜோஷி இதய நோயால் 1980ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் நாள் தனது 78ஆம் வயதில் இயற்கை எய்தினார்.

---



இரா.துரைசாமி

# தொழிற்சங்க இயக்கத்தில் தோழர் எஸ்.எஸ்.தியாகராஜன்

தமிழ்நாடு ஏ ஐ டி யு சி பொதுச்செயலாளர், ஏ ஐ டி யு சி யின் அகில இந்திய துணைத் தலைவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்உள்ளிட்ட பொறுப்புகளில் சிறப்பாக செயல்பட்டவர் தோழர் எஸ். எஸ். தியாகராஜன்.

சிறுகாட்டூர் சீனிவாசன் தியாகராஜன் (எஸ். எஸ். டி.) ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை அருகில்உள்ள சிறுகாட்டூர் என்ற கிராமத்தில் 1939 ஜனவரி 13 அன்று ஆச்சாரமிக்க பிராமண குடும்பத்தில் பிறந்தார். கும்பகோணத்தில் பள்ளிக்கல்வி, திருச்சியில்பொறியியல் கல்வியையும் பயின்றார்.

நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொறியாளராக பணியில் சேர்ந்தார். 1958 ஆம் ஆண்டு இராமனுத்து பஞ்சாயத்து தலைவராக இருந்த எஸ் அழகர்சாமியுடன் தொடர்பு ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியால் 1960 இல் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரானார்.

நெல்லை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர் சங்கத்திலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து செயல்பட்டார் தோழர் எஸ். எஸ். டி. தொடர்ந்து நெல்லை மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்திலும் கட்சியிலும் செயல்பட்டார். நெல்லை மாவட்ட ஏ ஐ டி யு சி செயலாளராகவும், கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினராகவும் செயலாற்றினார்.

1985 ஆம் ஆண்டு பஞ்சாலை தொழிலாளர்களுக்கான ஒரு தனி தீர்ப்பாயம்( டிரிபியூனல்) தமிழ்நாடு அரசால் நீதிபதி வரதன் தலைமையில் அமைக்கப்பட்டது. அந்த தீர்ப்பாயத்தில் தொழிலாளர்களின் பிரதிநிதியாக செயல்படுவதற்கு மாநில கட்சியால் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்.

எஸ் எஸ் டி. தொடர்ந்து சென்னையிலேயே அவரது தொழிற்சங்க, கட்சிப் பணி நிலைப்பெற்றது.

1988 முதல் ஏ ஐ டி யு சி யின் மாநிலச் செயலாளர்களில் ஒருவராகவும், 1993 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஏ ஐ டி யூ சி மாநில மாநாட்டில் தமிழ்நாடு ஏ ஐ டி யு சி யின் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். தொடர்ந்து 18 ஆண்டுகள் அந்த பொறுப்பில் திறம்பட செயல்பட்டார்.

அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளராகவும் இருந்தார்.

மாநில கட்சியின் பரிந்துரையின் பேரில் ஜெர்மனியில் ஓராண்டு கட்சிக் கல்வி



பயிலும் வாய்ப்பை பெற்றார். தொடர்ந்து கட்சிக் கல்வி இலாகா உறுப்பினராகவும் மார்க்சிய கல்வி ஆசிரியராகவும் செயல்பட்டார்.

தமிழ்நாட்டிலுள்ள எந்தவித பாதுகாப்பும் இன்றி ஒடுக்கப்பட்ட, உரிமைகளற்ற கட்டுமான தொழிலாளர்கள், வீட்டு வேலை தொழிலாளர்கள், டாஸ்மாக் தொழிலாளர்கள், ஆட்டோ தொழிலாளர்கள் மற்றும் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தியவர்

எஸ் எஸ் டி, ஐ எல் ஓ திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதில் முன்னணி பாத்திரம் வகித்தவர்.

இவரது ஆழ்ந்த படிப்பு, எழுத்து திறன் மொழிபெயர்ப்பின் பாங்கு, எளிமையான மேடைப்பேச்சு ஆழமான பொருள் பொதிந்ததாக அமைந்தது. தொழிற்சங்க செய்தி ஆசிரியர், ஜனசக்தி ஆசிரியர் குழுவிலும் தனது பங்களிப்பை சிறப்பாக செய்தவர்.

திருமணம் ஆகாமலேயே தன் வாழ்நாளை கழித்தார். இருப்பினும் தனது மூன்று சகோதரர்கள்,சகோதரி குடும்பத்தார் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார்.

அனைத்து தொழிற்சங்க இயக்க போராட்டங்களிலும், செயல்பாட்டிலும் எதிரும் புதிருமான கருத்துக்களைக் கொண்ட தலைவர்களையும் தனது அணுகுமுறையால் ஒன்றிணைத்தவர்.

தொழிற்சங்க இயக்கத்தின் எந்த ஒரு சிக்கலான பிரச்சனைகளுக்கும் ஆய்ந்து தீர்வை முன் வைத்தவர்.

தோழர்எஸ்.எஸ்.தியாகராஜன் நினைவு நாள் நவம்பர் 23, 2013.

தொடர்புக்கு: 99404 80356

# அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின்
# 5 லட்சம் உறுப்பினர் பதிவு இயக்கம்

**அனைத்திந்திய இளைஞர்பெருமன்றத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 5 நாட்களில் 5 லட்சம் இளைஞர்களை சந்தித்து உறுப்பினர்களாக சேர்க்கும் இயக்கம் தொடங்கியது.**

### சாதியில்லாத, மதபாகுபாடு இல்லாத, பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற புதிய சமுதாயம் படைப்போம்.

- அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் இந்தியாவின் முதல் இளைஞர் அமைப்பு .சுதந்திரத்திற்காக போராடி தூக்குமேடையேறிய மாவீரன் பகத்சிங்கின் லட்சியமான சமதர்ம கொள்கையை உயர்த்தி பிடிக்கும் அமைப்பு
- அனைவருக்கும் வாக்குரிமை எனும் முழக்கத்தை முன்வைத்து அதனை வென்றெடுத்த அமைப்பு
- அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை எனும் முழக்கத்தை முன்வைத்து கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை அறமும் அறிவும் தேசப்பற்றும் கொண்ட உன்னதமான இளைஞர் சமுதாயத்தை உருவாக்க துடிக்கும் அமைப்பு
- இந்தியாவை பாதுகாப்போம்!இந்தியாவை மாற்றுவோம்!!

### வேலை அல்லது சிறை, வேலைகொடு அல்லது நிவாரணம் கொடு,

### தமிழகத்தை பாலைவனமாக்காதே!

- எங்கேஎனது வேலைஎனும்முழக்கங்களோடு போர்க்களம் கண்ட அமைப்பு
- அரசியல்வாதிகள், அதிகாரிகள், சமூகவிரோதிகளின் முக்கூட்டு கொள்ளையை, ஊழல்களை எதிர்த்து போராடிய நெல்லை சுடலைமுத்து, சேலம் சிவக்குமார், திருவாரூர் ஜெயக்குமார்,கோவை சதீஷ்குமார் ஆகியோரை பறிகொடுத்த பின்னரும் சமரசமின்றி ஊழலுக்கு எதிராகவும்; சமூகவிரோத செயல்களுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடும் அமைப்பு
- இளைஞர்களின்எதிர்காலமேஇந்தியாவின் எதிர்காலம் எனும் முழக்கத்தோடு வேலையின்மைக்கு எதிராகவும், இளைஞர் வாழ்வை சீரழிக்கும் போதை பழக்கத்திற்கு எதிராகவும், போராடிவரும் அமைப்பு
- இந்தியா நமது நாடு, இந்தியர்கள் அனைவரும் ஓர் குடும்பம், நமக்குள் சாதி வேண்டாம், மதபாகுபாடுகள் வேண்டாம். ஆனால் இதனை திட்டமிட்டு உருவாக்கி, அரசியல் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள இளைஞர்களை அடிப்படைப்பிரச்சினையிலிருந்து திசைமாற்றும் ஆர்.எஸ். எஸ். பா.ஜ.க உள்ளிட்ட சங்பரிவார் அமைப்புகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற போராடிவரும் அமைப்பு
- ஒன்றிய அரசின் வெறுப்பரசியலை எதிர்த்து, மக்கள் ஒற்றுமை அரசியலை முன்வைத்து தனியார் முதலாளிகள் கொள்ளையை எதிர்த்து, பொதுத்துறையை மக்கள் சொத்தாக மாற்றக்கோரி, மாநில உரிமைகளை பாதுகாத்திட, இந்தி திணிப்புக்கு எதிராக, நீட்தேர்வை ரத்து செய்திட, சமூகநீதி இடஒதுக்கீட்டு உரிமைகளை பாதுகாத்திட, தொடர்ந்து இளைஞர்களை திரட்டி போராடி வரும் அமைப்பு
- இரத்தானம், உழைப்பு தானம், இயற்கை பேரிடர் மீட்பு பணிகள், சமூகநலத்திட்டங்களை மக்களுக்கு பெற்றுக்கொடுத்தல் போன்ற சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வரும் அமைப்பு
- பாலினசமத்துவத்தை நிலைநாட்ட போராடும் அமைப்பு

**இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் கல்வி அறிவு பெற்ற குடும்பமாக மாறவேண்டும். கல்விக்கேற்ற வேலையும், வேலைகேற்ற முறையான ஊதியமும் உத்தரவாதப்படுத்த வேண்டும் என போராடிவரும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தில் இணையுங்கள்!**

சமூக அக்கறையோடு ஒழுக்கமுள்ள இளைஞர்களாக உங்கள் வாரிசுகள் இருக்கவேண்டுமா?

பெற்றோர்களே!உங்கள் வாரிசுகளை இளைஞர் பெருமன்றத்தில் இணைத்துவிடுங்கள் என்கிற துண்டறிக்கைகளோடு தமிழ்நாடு முழுவதும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் உறுப்பினர் பதிவு இயக்கம் தொடங்கியுள்ளது.

**5 லட்சம் இளைஞர்களை உறுப்பினராக சேர்ப்போம்.**

**சுதந்திரப்போராட்ட வீரர்கள், புரட்சியாளர்கள் பெயரில் குழுக்கள் அமைத்து செயல்படுவோம்.**

**நவம்பர் 19 ந்தேதி முதல் வீடுதோறும் சென்று உறுப்பினர் பதிவு இயக்கத்தில் ஏராளமான இளைஞர்களை சேர்ப்போம்.**




















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 25.11.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## 10 சட்ட முன்வடிவுகளை காலதாமதப்படுத்தி திருப்பி அனுப்பிய ஆளுநர்

# 3 ஆண்டுகளாக என்ன செய்தார்?

## உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு சரமாரி கேள்வி



**2020 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்ட 10 சட்ட முன்வடிவுகளை இப்போதுதான் திருப்பி அனுப்புகிறார்; அதுவும் நீதிமன்றம் தலையிட்ட பின்னரே செயல்பட்டிருக்கிறார் என்றால், உண்மையில் 3 ஆண்டுகளாக ஆளுநர் என்ன செய்து கொண்டிருந்தார் என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.**

அத்துடன்,இந்த10சட்ட முன்வடிவுகளும் சட்டப்பேரவையில் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அடுத்து ஆளுநர் என்ன செய்யப் போகிறார் என்பதைக் காண டிசம்பர் 1 வரை தாங்கள் காத்திருக்கப் போவதாகவும் உச்சநீதிமன்றம் தெரி வித்துள்ளது.

### உச்சநீதிமன்றம் நோட்டீஸ்

தமிழ்நாட்டு மக்களின் நலனை முன்வைத்து சட்டப்பேரவையில் பல்வேறு காலகட்டங்களில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சட்ட முன்வடிவுகளில் 20க்கும் மேற்பட்ட சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்கவில்லை.

இதனால் திட்டங்களை நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது; எனவே, சட்ட முன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநருக்கு காலவரம்பு நிர்ணயித்து உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

நவம்பர் 10 ஆம் தேதி அன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, “சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகளை ஆளுநர் நிறுத்திவைக்க முடியாது” என்று கூறிய தலைமை நீதிபதி அமர்வு, “தமிழக அரசு அனுப்பிய கோப்புகளின் மீது முடிவெடுக்காதது ஏன்?” என பதிலளிக்குமாறு ஆளுநருக்கு உத்தரவிட்டது.

### ஆளுநரின் குயுக்தி

உச்சநீதிமன்றம் அனுப்பிய நோட்டீஸ் அனுப்பியிருந்த நிலையில், அதிமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட 2 சட்ட முன்வடிவுகள், தற்போதைய திமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட 8 சட்ட முன்முடிவுகள் என மொத்தம் 10 சட்ட முன்வடிவுகளை ஆளுநர் ஆர்.என்.ரவி, நவம்பர் 13 ஆம் தேதி அன்று அவசர அவசரமாக தமிழ்நாடு அரசுக்கே திருப்பி அனுப்பினார். ‘சட்ட முன்வடிவுகள் எதுவும் தன்னிடம் இல்லை’ என்று காட்டிக்கொள்வதற்காக அவர் தந்திரமாக இந்த வேலையைச் செய்தார்.

ஆனால், நவம்பர் 18 அன்று கூடிய சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் ஆளுநர் அனுப்பிவைத்த 10 சட்ட முன்வடிவுகளையும் மீண்டும் நிறைவேற்றி, ஆளுநருக்கே தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்தது. இதன் மீது ஆளுநர் தற்போது முடிவெடுத்தாக வேண்டும் என்ற கட்டாயம் உருவாகியுள்ளது.

### நிராகரிக்க முடியாது

இந்நிலையில், தமிழக அரசு ஏற்கெனவே தொடர்ந்திருந்த வழக்கு நவம்பர் 20ஆம் தேதி, தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் ஜே.பி.பார்திவாலா, மனோஜ் மிஸ்ரா அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்கி, “2020 ஆம் ஆண்டு முதல் 13க்கும் மேற்பட்ட சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் தரவில்லை. நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியதை அடுத்து, ஆளுநர் ரவி எந்தவித விளக்கமும் அளிக்காமல் சட்ட முன்வடிவுகளை திருப்பி அனுப்பி யிருப்பது சட்டத்தை மீறியதாகும். ஆளுநரின் செயல்பாட்டால் 7.3 கோடி தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. ‘ஒப்புதலை நிறுத்தி வைக்கிறேன்’ (‘மிஷ்வீமீலீஷீறீபீ ணீஓமீஸீமீ’) என்ற குறிப்புடன் மட்டுமே ஆளுநர் திருப்பி அனுப்பியதால், அந்த சட்ட முன்வடிவுகளை சட்டமன்றத்தில் மீண்டும் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி உள்ளோம். எனவே, இவற்றின் மீது ஆளுநர் முடிவெடுக்க காலவரம்பு நிர்ணயிக்க வேண்டும். ஒவ்வொரு சட்ட முன்வடிவுக்காக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தை நாட முடியாது” என தெரி வித்தார்.

### இனி குடியரசுத்தலைவருக்கு அனுப்ப முடியாது

தமிழ்நாடு அரசு சார்பில் வாதிட்ட மற்றொரு மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, “தற்போது ஆளுநர் முன்பு 15 சட்ட முன்வடிவுகள் நிலுவையில் உள்ளன. இதில் 10 சட்ட முன்வடிவுகள் சட்டப்பேரவையில் ‘மீண்டும் நிறைவேற்றப்பட்டவை.’ இரண்டாவது முறையாக சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டால், அதனை குடியரசுத்தலைவருக்கு அனுப்ப முடியாது; சட்ட முன்வடிவுகளை ஆளுநரால் கிடப்பில் போடவும் முடியாது. சட்ட முன்வடிவுகளை நிறுத்தவும் ஆளுநர்களுக்கு அதிகாரம் இல்லை. மாநில அரசு மற்றும் அமைச்சர்கள் ஆலோசனைப்படிதான் ஆளுநர் செயல்பட வேண்டும். எனவே, சட்ட முன்வடிவுகள் மீது ஆளுநர்கள் முடிவெடுக்க கால நிர்ணயம் செய்ய வேண்டும். அவற்றுக்கு உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டும்” என்றும் கூறினார்.

### மூன்று ஆண்டுகளாக என்ன செய்தார்?

அப்போது, உச்சநீதிமன்றமே கவலை தெரிவித்த பிறகும் ஆளுநர் ஆர்.என். ரவி, சட்ட முன்வடிவுகளை திருப்பி அனுப்பி இருக்கிறாரா? என்று கேள்வி எழுப்பிய உச்சநீதிமன்ற நீதிபதிகள், ஆளுநரின் செயலுக்கு தங்களின் அதிருப்தியை வெளியிட்டனர். மேலும், “உச்சநீதிமன்றம் கடந்த 10ஆம் தேதி ஆணை பிறப்பித்தது. ஆளுநர் 13ஆம் தேதி சட்ட முன்வடிவுகளை திருப்பி அனுப்பியுள்ளார். அதாவது, நீதிமன்றம் நோட்டீஸ் பிறப்பித்த பிறகு ஆளுநர் இந்த முடிவை எடுத்தார் என்று அர்த்தம். 2020 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து சட்ட முன்வடிவுகள் நிலுவையில் உள்ளன. இந்த மூன்று ஆண்டுகளாக ஆளுநர் என்ன செய்து கொண்டிருந்தார்? மாநில அரசு உச்சநீதிமன்றத்தை அணுகும் வரை ஆளுநர் ஏன் காத்திருந்தார்?” என்று அட்டர்னி ஜெனரல் வெங்கட ரமணியிடம் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் சரமாரி கேள்வி எழுப்பினார்.

“அரசியலமைப்பு சட்டப் பிரிவு 200ன் படி ஆளுநர் ஒப்புதல் அளிக்கலாம், ஒப்புதல் அளிக்காமல் குடியரசுத்தலைவர் முடிவுக்காக அனுப்பலாம், அல்லது சட்டமன்றத்துக்கே திருப்பி அனுப்பலாம். அவ்வாறு திருப்பி அனுப்பும் போது மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற குறிப்பு இடம்பெற வேண்டும். சட்டமன்றத்தில் இரண்டாவது முறையாக சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டால், அவை நிதி சட்ட முன்வடிவுகளுக்கு நிகரானவையாக மாறிவிடும்” என்றும் தலைமை நீதிபதி குறிப்பிட்டார்.

இதையடுத்து நிலுவையில் உள்ள சட்ட முன்வடிவுகளுக்கு ஆளுநர் எப்போது ஒப்புதல் அளிப்பார் என்பதையும், ஆளுநர் என்ன செய்யப் போகிறார் என்பதையும் அறிய டிசம்பர் 1 வரை நீதிமன்றம் காத்திருக்கப்போவதாக கூறி, ஆளுநர் முடிவெடுப்பதற்கான கால அவகாசம் வழங்கி, வழக்கு விசாரணையை உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றி அனுப்பும் சட்ட முன்வடிவுகளை ரத்து செய்யக்கூடிய ‘வீட்டோ’ அதிகாரம்எதுவும் ஆளுநர்களுக்கு இல்லை என்று கூறும் சட்ட வல்லுநர்கள், சட்ட முன்வடிவுகள் குறித்து முடிவெடுப்பதற்கான காலக்கெடு நிர்ணயிப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்றும் கூறுகின்றனர். தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தொடர்ந்துள்ள வழக்குகள் ஆளுநர்களின் வரம்பற்ற போக்குகளுக்கு முடிவுகட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

### முக்கியக் கோப்புகளுக்கு ஆளுநர் ஒப்புதல்?

தமிழக அரசின் சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காத விவகாரத்தில், நவம்பர் 20ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்த நிலையில், டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பதவி தவிர பிற அரசுப் பணி நியமனங்களின் கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் தமிழக ஆளுநர் அலுவலகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரத்தில், டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பதவி தவிர எஞ்சிய அரசு பணி நியமனங்கள் தொடர்பான கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாகவும், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான கோப்புகளுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நன்னடத்தை காரணங்களால் சிறைவாசிகளை முன்கூட்டியே விடுதலை செய்வது தொடர்பாக 580 பரிந்துரைகள் மாநில அரசிடம் இருந்து கிடைக்கப்பெற்ற நிலையில், அதில் 362 பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 165 பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில், 53 பரிந்துரைகள் கிடப்பில் உள்ளதாகவும் தமிழ்நாடு ஆளுநர் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. முக்கியமாக அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், பி.வி.ரமணா ஆகியோர் மீதான பல்வேறு ஊழல் வழக்குகளில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கவும் தமிழ்நாடு அரசுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi., Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.